Koviloor Digital Library

து யா ரு

காட்சிக் கண்ணி

(விளக்க உரையுடன்)

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்
— 84

— சரவணானந்தா.

2242
242
R65(வெள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

தயவு

காட்சிக் கண்ணி

(விளக்க உரை)

கோவிலூர் ஆதீனம்
2242

திருஅருட்பிரகாச வள்ளலார் இயற்றிய
திரு அருட்பாவில் உள்ள

"ஆணிப்பொன் அம்பலத்தே
கண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி அம்மா —"

என்ற தொடக்கம் கொண்ட 32 கண்ணிகளின்
விளக்கம்

கோவிலூர் ஆதீனம்
2242
R65(வள்)

வெளியீடு :

சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்
26-9-84

- சரவணானந்தா

1984 — 3/00

Koviloor Digital Library

முதற்பதிப்பு : 1984

வெளியிடுபவர்:

சத்திய ஞான கோட்ட அன்பர்கள்

திண்டுக்கல்.

விலை ரூ. 3-00

அச்சிட்டோர் :

விஜயா பிரிண்டர்ஸ்,

மதுரை-1.

Koviloor Digital Library

சிறப்புரை

'ஈற்றறியேன் இருந்திருந்திங் கதிசயிப்ப தென்நீ
என்கின்ருய் நீஎனைவிட் டேகுதொறு நான்தான்

காற்றறியாத் தீபம்போல் இருந்திடும்அத் தருணம்
கண்டபரி சென்புகல்வேன் அண்டபகி ரண்டம்

தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலைபரநா தத்தே
தோன்றியதாங் கதனடுவே தோன்றிய தொன் றதுதான்

மாற்றறியாப் பொன்னெளியோ அவ்வொளிக்குள் ஆடும்
வள்ளலருள் ஒளியோஈ(து) அதிசயிக்கும் வகையே.''

(திரு அருட்பா)

அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் உண்மையை அதன் நிறை அருளாலே காண்கின்ருர் நம் திரு அருட்பிரகாச வள்ளற் பெருமான். அக்காட்சியை வியந்தும், அதிசயித்தும் தன் சுத்த மனமாகிய ஆருயிர்த் தோழியின் மூலம் அணிந்து உரை செய்கின்ருர்.

அருள் ஒளி ஆன்மச் சுடராய்ச் சலனமற்று நெகிழ்வுற்று இருந்த தருணத்தே கண்ட அருட்பெருஞ்ஜோதிக் காட்சி, அகண்டமாய் நிறைந்தும், கண்டமாய்த் தன் உருவில் விளங்கியும், தன் உள்ளத்து உணர்விலே வள்ளற் சக்தி மயமாய்த் திகழ்ந்தும் ஆட்கொண்டதையே வியந்தோதி யுள்ளார். மேற்படி செய்யுளிலே. இதுபோலத்தான் இங்கு எடுத்து விளக்கக் கொண்ட காட்சிக் கண்ணியும், திருவரு ளாலே வெளியாக்கப் பெற்றுள்ளது.

மற்ற பலர் திருவருள் ஏகதேசத்தால், யோக ஞானக் காட்சியாகப் பலவகையில் கண்டு புனைந்து வனைந்து வரைந்து வைத்துள்ளனர். அவைகளைவிட வள்ளல் கண்ட காட்சியின் மாட்சி வரைப்பில் உரைப்பில் அடங்காத ஒன்ருகும் ஏனெனில் இது சுத்த சன்மார்க்க மரணமில்லாப்

Koviloor Digital Library

பேரின்ப வாழ்வைப் பயப்பதாயுள்ளதாலே உயர்சிறப்பு உடையதென அறியலாகும்.

மாற்றறியாத செழும் பசும் பொன்னாய் அகண்ட வெளி நிறை அருட்பெருஞ்ஜோதிக் கடவுள்தானே தன் முழு அனுபவத்தோடு வெளிப்பட்டு, என்றென்றும் வாழ்ந்து கொண்டே இருக்க வல்ல ஒரு நிறை மனித வடிவுடன் திகழ்ந்து கொண்டிருக்கத் திருவுளம் கொண்டார் இது சமயம். அதனால், மாபிரபஞ்ச நிறை வடிவ இறைவனே ஒரு சிற்பிரபஞ்ச நித்த மனித அருட்பிரகாசத் திருவுரு ஏற்க வந்துவிட்டார்.

இப்போது அந்த நித்திய அருட்பெருஞ்ஜோதிபதியே வள்ளல் அருட்பிரகாசத் தோற்றத்தோடு வெளியாகி உள்ளது உண்மையாம். இவ்வுண்மை விளக்கம் எல்லாம், ஆணிப் பொன்னம்பல அற்புதக் காட்சியாக வழங்கப்பட்டுள்ளது திரு அருட்பா ஆறாந்திருமுறையிலே, இதனை இன்றைய சன்மார்க்க அன்பர்கள், மெய்ப்பொருளை யுணராது மெய்மறந்து பாடிப் பாடிப் பரவசப்பட்டும், பெரும் பயன் பெறாது போகின்றனர். யாவரும் உண்மையை உள்ளபடி அறிந்து அரும் பயன் அடையவேண்டும் என்ற அன்புச் செயலாக இஃது இத்தருணம் திருவருளால் வெளியிடப்பெறுகின்றது.

இங்கு குறிப்பிடப் பெற்றுள்ள விளக்கம் மனக்கண்ணுக்கு விருந்தாய் அருந்தத் தந்ததுமட்டுமல்ல, உளநெகிழ் அனுபவத்தில் இதனைவிடச் சிறப்பான காட்சியும் பெற்று அனுபவமுற்றுத் திகழவேண்டும் என்பது எனது சுத்த மனத்து அவாவும், அருள் ஆண்டவரின் ஆணையும் ஆகும். எனவே இது கொண்டு இன்பநிலை பெறுக எவரும்.

சத்திய ஞானகோட்டம்,
திண்டுக்கல்
7- 8- 84

இங்ஙனம்,
தயவு-சரவணனந்தா

Koviloor Digital Library

தயவு

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

காட்சிக் கண்ணியின் கருத்து

முன்னுரை

சுத்தசன்மார்க்கத் திரு அருட்பிரகாச வள்ளலார் கண்ட அருட்பெருஞ் ஜோதிக் கடவுட் காட்சி, அருள் அற்புத வெளியீடேயாகும். அவரது அருள் உள்ளத்திலே, ஆண்டவரின் உண்மை ஆதி அந்த, அடிமுடி இரகசியம் எல்லாம், அருட் ஜோதி இயல் வண்ணமாகத் தோற்றியது. எனினும், அவ் அருள் ஒளி, சிவமயமாய்ப் பொலிந்து இலங்கக் கண்டு, புனைந்து, அணிந்து, வியந்து கூறப்பெற்றுள்ளது சிவம். உண்மையில் அருட்ஜோதிப் பரம்பொருளே அல்லாது சமயமதச் சார்பு கொண்டதல்லவாம்.

தமிழே, கடவுள் கருணைஜோதியாம் மெய்ப்பொருளையே அடிநிலையாய்க் கொண்டு, அருள் உள்ளத்தினின்று உருவாக்கப் பெற்ற ஒன்றாகும். அவ்உள்ளொளியைக் கந்தழி என இயற்கைக் கற்பனைக் காரணப் பெயராய்க் கொள்ளப் பட்டது முதலில். அதுவே, செயற்கைக் கற்பனை அனுபவக் காரணப் பொருளாய்த் தோன்றி விரிந்து படர்ந்துள்ளது சிவஜோதிப் பரநிலையாக. எனவே, தமிழும், சிவமும் ஒன்றெனத் தழைத்து பதிவுற்றது தமிழர் உள்ளத்திலே. சிவ பரமாம் உள்ளக் காட்சியில் ஆயிரம் ஆயிரம் விரிந்துள்ளது முன்னோரின் ஆன்மாகாசத்திலே பின்னுற்றோர், அகம் ஒன்றிக் கனிந்த போதெல்லாம், கனவிலும், நனவிலும், துரியானுபவத்திலும் கண்ட காட்சிகள் சைவபரமாகவே தோற்றியதில் வியப்பில்லை.

நம் வள்ளற் பெருமானின் உள்ளத்தளியில் தோற்றிய கடவுள் அனுபவக்காட்சி சிவபரமாய் விளங்கி அருட்பெருஞ்

Koviloor Digital Library

ஜோதியாய்த் தழைத்து தனிப்பெருங்கருணையோடு நிறைவினைவு கொண்டுள்ளது. எனவே அவரது தெய்வக் காட்சியைச் சிவபரமாகவே கண்டு, அதீதத்தில் கற்பனை கடந்த அருள் ஒளியில் ஏற்று அகில உலகுக்கும் வழங்க நேருகின்றது.

அகண்ட பெருஞ்ஜோதியாய் நிரம்பியுள்ள கடவுள் ஒருவரே ஆவர். அவர் எங்கும் என்றும் பரிபூரணராய் அகத்தே இருந்து கொண்டு புறத்தே யாவுமாய் விளங்குகின்றார். இப்படியுள்ள ஏக பரஞ்ஜோதிபதிதான் வள்ளல் உள்ளமாகிய ஆன்ம சிற்சபையில் எழுந்தருளி, ஆணிப் பொன்னம்பல அற்புதக் காட்சியைக் கண்டு கொள்ளச் செய்தார். அருள் ஒளி ஆண்டவர் தானே, எதுவுமாய்த் திகழ்கின்றதை, ஒரு பக்குவியின் சிரநடு சிற்சபையில் அருள் ஞான உணர்வாகியும், சூழுற்ற ஜீவ தேகாதி பிரபஞ்சமெல்லாம் பொன்னொளி வடிவாகவும் கண்டு கொள்ளப்படுகின்றது. இவனது, அருள்ஞான உணர்வு ஆண் தத்துவ ஆகாச நிலையைக் கொண்டும், சூழ் உருவம், பூத ஜோதிக்கு பொன் வண்ண வடிவாயும் இணைந்து திகழ்கின்றதாம். இதனால் இவன் காணும் ஜோதிக் காட்சி, ஆண் இயல் கொண்ட (ஆண்+ப்+பொன்னம்பல) ஆணிப்பொன்னம்பலக் காட்சியாக வருணிக்கப்படுவதாம்.

இக்காட்சி இவருத- (அதாவது, லோபத்தன்மையில்லாத தயை விளங்கு) சுத்தசிவ சன்மார்க்க நிலையிலிருந்து, அருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடும், எவராலும் பிறிதொன்றால் கண்டறிதல் கூடாது என ஓதப்படுகின்றது. அந்நிலையுற்று நின்ற அருள் அடிகளேயன்றோ அவ் ஆணிப் பொன்னம்பலக் காட்சியை அனுபவத்திற் கண்டு வெளியிடுகின்றார் 32 கண்ணிகளிலே.

ஏகராய் விளங்கும் தனித்தலைமைப் பெரும்பதி, இம்மனிதப் பிறப்பிலே, மேல் நிலை நிராதாரத்தில் ஒன்றாயும், கீழாதார நிலைகளில் ஏழாய் ஜீவான்ம இயல்கொண்டு, அக அனுபவம்

Koviloor Digital Library

ஏற்க உள்ளதாம்! கடவுள் ஆன்ம அனுபவத்திற்கு உயிருடம்பு உடன் கூடி இருக்க வேண்டுவது அவசியம். தேகம் இல்லாமல், ஆன்மா விளங்காது, அனுபவம் பெருது. ஆகையால். உடல், உடன் இருக்க வேண்டும், ஆனுல் பொறியுடம்பின் புலன் இச்சை நீங்கி மேல் ஆன்மநிலை நின்றே தயாவாழ்வு கொண்டு ஓங்க வேண்டுவது முக்கியம். இதனுல் தான் சுத்த சன்மார்க்க அநுபவம், கழுத்துக்குமேல், தலையிடத்தே பெறலாகும் என்கின்ருர் வள்ளற் பெருமான். இக் கருத்துக்களுக்கு, இரு இங்கிதமாலைச் செய்யுளை எடுத்துக் காட்டலாம்.

1. "செய்காண் வளஞ்சூழ் ஒற்றியுளீர் திருமால் முதல்முத்
தேவர்கட்கும்
ஐகாண் நீர்என் றேன்அதன்மேல் அணங்கே நீ ஏழ்
அடைதி என்ருர்
மெய்காண் அதுதான் என்என்றேன் விளங்கும் சுட்டுப்
பெயர் என்றே
எய்காண் உறவே நகைக்கின்ருர் இதுதான் சேடி
என்னேடீ".

2 "யான்செய் தவத்தின் பெரும்பயனே என்ஆர் அமுதே
என துணையே
வான்செய் அரசே திருவொற்றி வள்ளல் வந்த(து)
என்என்றேன்
மான்செய் விழிப்பெண் ணேநீஆண் வடிவா னது
கேட்டுள்ளம் வியந்
தேன் கண் டிடவே என்கின்ருர் இதுதான் சேடி
என்னேடீ".

இவற்றின் அருட்பொருள் விளக்கம் தனி நூலில் வெளியாகியுள்ளது. அதிற்கண்டு கொள்ளலாம். இவற்றின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது இதுதான். ஒரு ஐ ஆகிய கடவுளாம் தலைவர், தலைவியின் ஆன்மானுபவத்தின்

Koviloor Digital Library

பொருட்டு, (எழ் ஐ) ஏழை ஆகிய பெண் தத்துவ சப்த தாதுக்களாலாகியவுடல் கொண்டு விளங்குகின்றதாம். இதனை இங்கிதமாயுணர்த்தவே, மும்மல முப்புர ஒழிவிற்காக, தலை நடுப்பகர மேல் லகரமெய்யாம் ல் சேர்த்து 'பல்' நிலையாக ஒருவாறு காட்டப்பட்டுள்ளதாம்.

அம்மேனிலை பொருந்த, பெண்ணியல் தேகப் பற்றுடை தலைவி அப்பாற்றின் நீங்கி, ஆண் இயல் ஆன்ம ஒளியுருக் கொண்டு நிற்றல் வேண்டும் என இங்கிதமாய் இசைக்கப் பட்டுள்ளது இரண்டாம் செய்யுளில். இந் நிலை நின்று, ஒருமையும், தயவும் பெருகும்போது உண்டாம் காட்சிதான் இங்கு ஆணிப் பொன்னம்பலக் காட்சியாக வெளியாகியுள்ளது அக்காட்சிக் கண்ணிகளில் குறிக்கப்படுவன எல்லாம் ஒருவாறு சுருங்கச் சொல்லுமிடத்து, இப்படிக் காணலாம். 1. முதலில் ஜோதிமலையின் தோற்றம், 2. அதன் மேல் மேடை ஒன்று, 3. அம்மேடைமேல் ஏழ்நிலை மாடம், 4. அதன் மேல் பொன் தம்பம், 5. மேல் பொற்கமல ஆலயம், 6. அங்கு தான் அற்புதானந்த அருட்பெருஞ்ஜோதி நடனபதியின் திருச்சந்நிதி, அவ்விடம் உற்று திருவருள் அனுபவம் நிறைவு பெறுகிறது. அது சொல்லில் அடங்காததாம்.

இவ்வளவு காட்சியும் புறத்திருந்து திரைப்படக் காட்சி போல் காணக்கூடியதன்று. அருள் ஞான அனுபவத்தில் பெறவேண்டியவையாம். மேலும், இது சிவானுபவமாய் தோற்றுவிக்கப்பட்டிருப்பினும், அருட்பெருஞ்ஜோதி அதீதானுபவத்தில் அகில உலகத்தவர்க்கும் உரிய ஒன்றாக உள்ளதாகும். இதனால், மக்கள் சமுதாயம் முழுமைக்கும், அகப் பேரின்பானுபவத்திற்கு உகந்ததாய்க் கொள்ளப்பட வேண்டும். சுத்த தயாநெறி நின்று உலகம் எல்லாம் இக் காட்சியின் மெய்ப்பொருளைக் கண்டு, உளத்திற்கொண்டு, தினசரி வாழ்விலே கடைபிடித்து நித்தியானந்தத்திலே தழைத்து ஓங்கலாகும்.

Koviloor Digital Library

மேல், காட்சிக் கண்ணிகளை தனித்தனி எடுத்து, ஆய்ந்து தெளிவோம்.

திருஅருட்பாவிலே இந்த காட்சிக் கண்ணி, ஆறும் திருமுறையிலே காண்கின்றேம். இதில் எடுப்பாக, பல்லவியாகக் கூறப்பட்டுள்ள,

ஆணிப்பொன் அம்பலத்தே கண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி — அம்மா
அற்புதக் காட்சியடி.

இந்த வியன் எடுப்பையே முதலாகக் கொண்டுதான் பின் வரும் முப்பத்திரண்டு கண்ணிகளும் தொடுக்கப் பெற்றுள்ளன. ஆதலின் இதனையே ஒவ்வொரு கண்ணிக்கும் மகுட முடியாக இணைத்து இசைக்கப்படுவதாம். இந்தத் தலையாய மணிமுடிக்கு முதலில் பொருள் விளக்கம் காண்போம்.

இதில் வரும் ஆன்மானுபவ அக உண்மையை, மன அறிவு மூலம் உலகுக்கு வழங்கப்படுகின்றது என்று அறிய வேண்டும். ஆன்மாவைத் தலைவியாகவும், அவ்ஆன்ம அனுபவ விளக்கம் வெளிப்படுத்த உள்ள சுத்த மனத்தை அத்தலைவியின் ஆருயிர்த் தோழியாகவும் புனைந்துரைப்பது தமிழ் நெறி மரபு ஆம். இது கற்பனையோ பொய்ப் பாவனையோ அல்ல. பெண்தத்துவ உடல் உணர்வுநிலையில் உள்ள ஜீவமான்வை பெண்ணாகக் கொள்ளல் இயல் உண்மையே. இந்த ஜீவான்ம உணர்வாகிய மன அறிவு தான், அருள்அனுபவத்திற்கு உற்ற துணையாய் உதவு கின்றதால் தான், தலைவியின் தோழியாக சாற்றப்படுவதில் பொருள் இருக்கிறது. திருஅருள் அனுபவத்தால் பதிவாழ்வு பெறலானபோது, தலைவனும் தலைவியும் கூடாமற் கூடிப் பிரிவறத்திகழும் பேறுகிடைக்கின்றதாம்.

பொன்னம்பல உண்மை.

"ஆடும் கருணைத் திருநடத்தீர்
ஆடும் இடம்தான் யாதென்றேன்

Koviloor Digital Library

பாடும் திருவும் சௌந்தரமும்
பழமும் காட்டும் இடம்என்றார்
நாடும் படிநன்(கு) அருளுமென்றேன்
நங்காய்! முன்பின் ஒன்றேயாய்
ஈடுந்திய பல் நடுவுளதாம்
என்றார் தோழி இவர்வாழி''

விளக்கம்: ஓம் என்னும் பிரணவநாத ஜோதியாய் எங்கும் விளங்கும் கடவுள் உண்மை அடையாளச் சொல், அ - உ - ம் என உள்ளது. இது, இடைநிலை சுருங்கி 'அம்' எனவும் வரும் ஓம் என்ற சொல்லே ஒருவனது ஆன்ம ஆலயமாய் அமைந்து, அதன் உட்பொருள் ஆம் மூவெழுத்தே, உடல், உயிர், உள்ளொளியாய் அமைந்து, பக்குவத்தே சுத்த, பிரணவ, ஞான தேகமாம், பொன், அம், பலமாய் அனுபவப்படுவது. இதுவே இங்கு. திரு. சௌந்தரம், பழம் எனக் குறிக்கும், பொன் + அம் + பலம் = பொன்னம்பலம் என குறிக்கப் பட்டுள்ளது. இந்த திரிதேக சித்தி தரும் ஆலயம்தான், மனிதனின் தலைநடுப் பல்நிலையில் (அம் + பல் + அம்) அம்பலம் என அனுபவம் தர அமைந்துள்ளதாம். இந்த அம்பலமே ஆணிப் பொன்னம் பலமாகவும் மொழியப்படும்.

ஆணிப்பொன்னுவது: சுத்தமான பொன், கனகம் ஆம் கடவுள் உண்மை அருட்பெருஞ்ஜோதியாய், மாற்றியாத செழும்பசும் பொன்னாய் எல்லாவற்றின் அகம் இருந்து விளங்குவது. அதுவே, ஓர் ஆன்மாவில் ஆணிப்பொன் என, 1008 மாற்றுடையதாய்த் திகழ்ந்து, 96-தத்துவாதீதமுறும் பக்த அன்பரை அல்லது பத்தரை (10½) மாற்று, இறை வண்ணமாய் மாற்றுகின்ற தங்கமாய்த் தங்கி விளங்குகின்றதாம். இவ்வண்ண நிலையுற்ற நம் வள்ளலார்தான் அந்த ஆணிப்பொன்னம்பலக் காட்சியைக் கண்டுரைக்கின்றார்.'

இந்த ஆணிப்பொன்னம்பலத்திலேதான் நம்பதி செம் பொருட்ஜோதியாய்' மாணிக்கமாலை மலர்ந்த மண்டலமாய்த்

Koviloor Digital Library

தோற்றி அருள் அமுதம் வழங்கி வாழ்விக்கவுள்ளார். அதனை உண்டு பிறவிப்பெரும்பயன்பெருது, அற்பப்பொன் பொருள் பெருக்கும் வாணிபப் பிழைப்பு பயனின்ரும். இக்கருத்தைத் திருமூலர்,

"மாணிக்க மாலை மலர்ந்துஎழு மண்டலம்
ஆணிப்பொன் னினறங் கமுதம் விளைந்தது
பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்
ஊணுக் கிருந்தார் உணராத மாக்களே'' எனவும்,
"காணிப்பொன் கொண்டு கடைகடை தோறும்
வாணிபஞ் செய்து மயங்கித் திரிவேனை
ஆணிப்பொன் ஞன அறிவை அறிந்தபின்
மாணிக்கம் பெற்று மகிழ்ந்திருந் தேனே''

எனவும் தெளிவு செய்யப்பட்டுள்ளது. இக்காட்சி, சுத்தசன் மார்க்கம் தோன்ருத அன்று, திருமூலர்க்கு பெருமகிழ்விலே இருத்தி, மேற்கொண்டு பிறவாநிலையில் உறைய வைத்து விட்டது உண்மையே. ஆனல், இப்போது, சுத்த சன்மார்க் கியாம் நம்வள்ளற்பெருமானுக்கு இவ்வாணிப்பொன்னம்பலக் காட்சி திரிதேக சித்தியோடு கூடிய மரணமில்லாப் பேரின்ப வாழ்வில் என்றும் விளங்க வைத்துவிட்டது உண்மையிலும் உண்மையாகும்.

சைவத்திருமுறையின் பத்தாவதாகிய திருமந்திரத்தைத் தந்த திருமூலர், தான் கண்டு பெற்ற ஆணிப்பொன்னம்பலக் கூத்தினை எப்படி வியந்து வியந்துபோற்றியுள்ளார் என்பதைப் பின்வரும் ஒரு மந்திரச் செய்யுளால் அறியலாம்.

"மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யார் உரைப் பாரே."

இந்த ஆனந்த நடனபதியின் அற்புதக்காட்சியை, அருட் பெருஞ் ஜோதி வெளியில கண்டு, அகில மாந்தர்க்கும் அருட்பயன் விளைய விளக்குவரம்.

Koviloor Digital Library

1. ஜோதி மலை யொன்று தோன்றிற் றதிலொரு
வீதியுண் டாச்சுதடி அம்மா
வீதியுண் டாச்சுதடி.

அகில நிறை அருட்பெருஞ் ஜோதியே, அசைவற்ற அழிவற்ற நிலைத்த பொருளாய்த் தோற்றலின் பெருஞ் ஜோதி மலையாக ஓதப்படுகின்றது. இக்கருத்து அனுபவ மாலையில்,

"ஈற்றறியேன் இருந்திருந்திங் கதிசயிப்ப தென்னீ
என்கின்றாய் நீ எனைவிட் டேகுதொறு நான்தான்
காற்றறியாத் தீபம் போல் இருந்திடும் அத்தருணம்
கண்டபரி சென்புகல்வேன் அண்டபகி ரண்டம்
தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலைபரநா தத்தே
தோன்றியதாங் கதனடுவே தோன்றியதொன் றதுதான்
மாற்றறியாப் பொன்னொளியோ அவ்வொளிக்குள் ஆடும்
வள்ளலருள் ஒளியோஈ ததிசயிக்கும் வகையே",

என்ற பாவால், அகமுற்று, அசைவற்று, காற்றறியாத தீபம் போல் சலனமற்றிருக்கும் தருணம், போத உணர்வு ஒடுங்கிய நிலையில், உளம் நெகிழ, அருள் உணர்வு பொங்கப் பொங்க பேரொளிக் காட்சி கண்டு கண்டு வியக்கப்படுகின்றது. அதனைத்தான் சுத்த மனமாகிய தோழிக்குக் கூறிக் கூறி மகிழ்கின்றது. இந்த ஆன்மாவாம் தலைவி

பரநாத நிலைக்குமேலே அகண்ட பெருஞ் ஜோதி மலையே முதற்கண் தோற்றுகின்றது. இதுதான், மாமேருப் பொன் மலையாக அணிந்துரைக்கப்படுவது. இம்மலைமீது வளர்ஜோதி வளநாட்டிலேதான் அருட்ஜோதி வள்ளலைக் கண்டு, ஆனந்த வாழ்வு பெற உள்ளோம் சாதாரண உயர்மலை மேல்நின்று விரிந்த உலகக் காட்சியைக் காண்பதும் அம்மலை வாசத்தால் நற்காற்றும் நன்னீரும் ஏற்று உயிர் உடம்பிற் சுகவாழ்வும் சேர்வது போன்று, இந்த அக அருட்ஜோதிமலை வாசத்தால் அற்புதக் காட்சியும், நித்தியானந்தவாழ்வும் சேர்வது

Koviloor Digital Library

உண்மையே சிரநடு சிற்சபையிலேதான், செல்லாமற் சென்று, சலியாது நின்று திருவருளால் காணுதகாட்சி எல்லாம் கண்டு கொண்டுள்ளது இந்தப் பக்குவ ஆன்மா. அந்த ஜோதிமலே மேல் ஒரு பெரிய வீதி தெரிகின்றது. அவ்வருட் ஜோதி வீதியில் வியந்து நிற்கும் நம் வள்ளல், அருள் நாட்டத்தோடு, மற்ற எதையும், எவரையும் லட்சியம் பண்ணுமல் இருந்த தருணம் பறந்தாற்போல், நடவாதே நடந்து மேற் செல்கின்ற அனுபவம் உண்டாகின்றதாம். இப்போது அடுத்த காட்சி நிலே தோற்றுகின்றது.

2. வீதியிற் சென்றேன் வீதி நடுவொரு
   மேடை யிருந்ததடி அம்மா
   மேடை யிருந்ததடி

அகண்டவான் நிறைஜோதி வெளி ஒளியில் ஒரு வீதி உண்டானதாம். இது நம்பகுதிப் பிரபஞ்சப் படைப்புத்தோற்ற மாக இன்றைய அறிவியல் விண்ணூலும் விளம்புகிறது. இதனே (MILKY WAY) பால வீதி என்று கூறுகின்றனர். இந்த அகல்வான் பெரு ஒளியினின்றே நம் விண்மணியாம் ஜோதி சூரியன் தோற்றியுள்ளது.

அருட்பிரகாசர் தம் அக அனுபவப் பிண்டக் காட்சியிற் கண்டன வெல்லாம், அண்டப் பிரபஞ்ச இரகசியத்தை யுணர்த் தவே, திருவருளால் வெளியாக்கப் பட்டுள்ளன வாய் அறிய லாகும். பெருஞ்ஜோதி வெளியில் திகழ் ஞாயிறு தான் நம் பிண்ட ஆன்மாவாம். இவ் ஆன்மாவே 'ஓம்' எனும் ஒரு சொல்லாகவும் கூறப்படும். இந்தப் பிண்ட ஆன்மாவைச் (SOUL) 'சோல்' என்கின்றனர் மேனுட்டார். இதுபோல் அண்டஜோதியாம் ஞாயிறையும் (SOL) 'சோல்' என்றே உரைக்கின்றனர். நம் தலேநடுப் பகர வடிவிற் திகழ் ஆன்மா வைச் சுட்டும் 'Soul' லில், பகரவடிவ 'U' யு எனும் எழுத்து உள்ளது புறச் சூரியனே சுட்டவந்த 'Sol' லில் அந்த யு-இல்லே யாம். புறச் சூரியனுக்குப் பல் போனதற்கு ஒரு தத்துவக்

Koviloor Digital Library

கற்பனை, தக்கன் வேள்வியின் வினைபயனும். அதன் மெய்ப் பொருள் உண்மை, தேகப்பற்று ஒழிக்கப்படவே தற்போத நாசமாம் 'தக்ஷயக்ஞம்' அல்லது தக்கன் வேள்விக்கற்பனை. அகப்பகாபீட ஆன்மஜோதியில், அருள்ஒளியாய் அனுபவப் படும் உண்மை புற உலகில் கண்டு கொள்ள முடியாது என்பது கருத்து. வான் ஞாயிறு, திங்களாதி பிற கோள்களைக் கொண்டு திகழுஞ் போல நம் ஆன்ம ஜோதிமணி கீழ் ஆதார நிலையங்களைக் கொண்டு திகழ்கின்றதாம். சூரிய ஜோதியிற் கலந்து மறைந்த எழு வண்ணங்களும், ஆற்றல்களும், புறத் திருந்து செயல்பட, அக ஆன்ம ஜோதியினை மறைத்தும், வெளிப்படுத்தியும் ஏழ் வகைப் பிறவி ஜீவர்களைப் பக்குவப் படுத்தி, மனிதப் பிறப்பில் ஆறறிவுக்கப் பாலான, மெய்ஞ்ஞான ஏழாம் நிலையில், மெய் இன்பானுபவம் பெற உதவுவதாம்.

எனவே, ஜோதி வீதியிற் கண்ட மேடை என்பது நம் ஆன்மாவே என்பது தெளிவு. இவ்ஆன்ம உண்மைதான் பின் வரும் கண்ணிகளில் விளக்கப்படுவதைக் காண உள்ளோம்.

3. மேடை மேலேறினேன் மேடைமேல் அங்கொரு
கூடம் இருந்ததடி — அம்மா
கூடம் இருந்ததடி

இங்குதான் ஆன்மநிலையைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது. இந்தக் கூடம் என்பதுதான் ஆன்மா ஆகும், இவ் ஆன்ம விளக்கத்திற்காகவே, இம் மனிதப் பிறப்புத் தேகமும், இதில், சிரநடு ஜோதிப் பீடமும் அமைக் கப்பட்டுள்ளனவாம். ஆகையால் முன் குறிப்பால்! உணர்த்தப் பெற்றது, ஜோதி மலையும், வீதியும், இத்தேகத்தே உற்ற மெய்யக நிலையே ஆம்.

ஆன்ம உண்மை அறிந்து கொள்ளப்படும் முன்பே, திரு வருளால் இத் தேகமும், அக ஒளிநிலையும் அமைக்கப்பட்டு

Koviloor Digital Library

விட்ட செய்தி அறிந்து கொள்ள முடிந்ததாம் இப்படித்தான் முன் இரு கண்ணிகளின், கருநிலை சூக்குமப் பொருள், உருவாகி வருமுன், ஒதாது உணர்ந்து வெளியிட்டது போல் அமைந்துள்ளனவாம்.

இப்போது, நம் வள்ளற் பெருமான், மனத்தால் அல்லது மெய்யாகவே அகமேடையாம், ஆன்ம பீடத்தில் ஏறி நிற்பதாக உணர்கின்ருர். ஆம். அங்கிருந்துதான் அந்த ஆன்ம கூடத்தைக் காண்கின்ருர். அறிவரிய ஆன்மாவை யார் அறிவார்! அருளறிவுடையாரே ஆன்மாவை அறிவார், அன்றி பிற யாரும் அறியார் என்பது உண்மை. அதனுல்தான் ஆன்மாவைப் பற்றியும், அவ்வான்மாவையே ஒரு கடமாய்க் கொண்டிலங்கும் கடவுளைப் பற்றியும் இதுவரை தெளிவாக எவரும் சொல்லவில்லை என்பது குறிப்பு. முன்னேர் ஏகதேசமாய் அயலிருந்து கண்டு பலவாகக் கற்பனை செய்து கூறிவிட்டு மறைந்தார்களே யன்றி, கூடி இருந்து கொண்டு வாழ்ந்தார்கள் இல்லையாம். ஆகவேதான் நம்பெருமான் மேடைமீது இருந்து, கண்டு கொண்டுதான், ஒரு, ஒப்பற்ற கூடம் இருந்ததடி, கூடம் இருந்ததடி என்று குதூகலிக்கின்ருர். அக்கூடத்தை நேருக்கு நேராகக் கண்டு விட்டார். அக்கூடத்தை அடுத்து அடைந்து மேல் அனுபவம் கூற முனைகின்ருர். அதுதான் :

4 கூடத்தை நாடஅக் கூடமேல் ஏழ்நிலை
மாடம் இருந்ததடி — அம்மா
மாடம் இருந்ததடி.

என்று வியந்தோதுகின்ருர்! ஆன்மாவாகிய கூடம் கடவுளுக்கு ஆலயம் ஆம். கடவுள் ஆகிய அருட்பெருஞ்ஜோதி மெய்ப் பொருள், உள்ளிருந்து கொண்டே ஆள்கின்றது. அருளாட்சியின் ஐந்தொழிற் செயலால், எப்பொருளும் எவ்வுயிரும் தோன்றி, விளங்கி, விளங்கி, விளக்கம் பெற்று ஆன்ம பரிபாகம் அடைந்து வருகின்றது. முடிந்த ஏழாவது நிலையிலே,

Koviloor Digital Library

மனித அருள் அறிவிலேதான் கடவுள் ஆன்ம உண்மை வெளியாகின்றது.

கூடமேல் ஏழ்நிலை மாடம் இருக்கின்றதாம். ஆம் அந்த ஆன்மாவில்தான் ஏழு அடுக்குமாடம் இருக்கின்றதாம். அவை ஏழ்வகைப் பிறப்பு என்பர். அது அறிவு அளவை கொண்டு வகுக்கப்பட்டதாம். ஓர் அறிவு முதல் ஐயறிவு வரை உள்ள உயிரினங்களில் புலன் உணர்வாகிய அறிவுதான் தோன்றி விளைவு கொண்டு நிறைவு பெறுகின்றது. அதன்மேல், ஆறும் அறிவாகிய மனோ பகுத்தறிவு செயல்படும் பிறவிதான் மனிதப் பிறப்பாகும். இந்த மன அறிவைத்தான் சாதாரணமாக அறிவு என்பர். இதற்குக் கீழ் நிலையில், அவ்வறிவைப் புலன் உணர்வு என்றும், மேல்நிலையில் (அதாவது) மனஅறிவுக்கு மேல்நிலையில் விளங்கும் மெய்யறிவுதான் ஞானம் என்றும் கூறப்படும். இந்த ஞானநிலையே ஏழாவதாக உள்ளது. இதனால் அருள் விளக்கம் ஏற்பட்டு, யோகானுபவ சித்திகளும், ஞானானந்த அனுபவமும் சித்திக்கும். இதனாலே இவ்வான்மா ஏழ்நிலை மாடமாக வர்ணிக்கப்படுகின்றது.

சுத்த சன்மார்க்கம் விளங்காத காலமெல்லாம், கீழ் ஆதாரப் படை வீடுகளில் இருந்து முயன்றவர்கள், எவ்வளவோ யோக ஞான சித்திகளைப் பெற்று உலகம் வியப்ப வாழ்ந்தவர்களும் முடிவில் அடங்கி மறைந்தே போனார்கள். ஏழாவது நிலையில், இறை ஒளியில் மறைவுறுவதே முடிவென எண்ணி, மடிந்து பிறவாமையிற் கிடந்தது அபக்குவநிலையே. இத்தருணம், கீழ்நிலைகளிற் பற்று கொள்ளாது, ஏழாநிலையாம் ஆன்ம வடிவில், இயல்பாகவே இருந்து கொண்டு, இறவாது இன்பொடு வாழ ஆணை பெறப்பட்டுள்ளது; ஒவ்வொரு ஆன்மாவுக்கும். இதனைத்தான், நம் அருட்பெருஞ் ஜோதி கண்ட வள்ளல், சத்திய ஞான சபையிலே ஏழ் வண்ணத்திரை நீக்கி, எழில் வண்ண இறை ஜோதியைக் காட்டி இறவா இன்பப் பேறு பெற வழிசெய்துள்ளார், வடலூரிலே! இல்லை' இந்த உடலூரிலே!!

Koviloor Digital Library

இவையே ஏழ்நிலை மாடக் காட்சியின் மாட்சி.

5 ஏழ்நிலைக் குன்றும் இருந்த அதிசயம்
என்னென்று சொல்வனடி அம்மா
என்னென்று சொல்வனடி.

இந்த ஏழ்நிலை ஆன்ம மாடத்திலே, எவ்வளவு பேர் அற்புத ஆற்றல் அடங்கியுள்ளது என்று வியக்கின்றோர்! இவ்வுள்ளடக்க ஆற்றல் உண்மை விளக்க, ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு விதையிலும், ஒவ்வொரு உயிரிலும், ஒவ்வொரு பொருளிலும், நம் அனுபவ நிலையிலும் கூட ஏழ் இயல் நிலைகள் அமைந்துள்ளனவாக ஆய்ந்தறிகின்றோம் இன்று.

சின்னஞ்சிறிய ஆல விதையிலே, அதிசூக்குமமாய் அம்மர விளைவுக்கும், பக்குவ பயனுக்கும் ஆம் சக்தி அடங்கி இருந்து காலத்தே வெளிப் படுவதை அறிவோம். இது போலத்தான், ஓர் ஆன்மாவில் நிறைசக்தி அடங்கி இருந்து, கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகி, காரண, சூக்கும, தூல ,நிலைகளில், மேலான அனுபவத்தை விளைவித்து, அருள் ஒளிமயமாய் நிறைவாழ்வில் நித்தியானந்தமாய் வாழச் செய்வதாம்.

மகா பிரபஞ்சம் எவ்வளவு பெரியது! அவற்றில் உள்ள' பொருள்களையும், ஆற்றல்களையும், உயிர்களையும் இடையருது, ஆக்கியும், காத்தும், அழித்தும், பக்குவப் படுத்தியும் அருள் பாலித்தும் வருகின்ற பேர் அற்புதப் பெரும் முழு இயல் வண்ணம் எவ்வளவு பெருமை வாய்ந்தது! அவ்வளவு பேர் அளவும் பெரும் இயல்பும் கொண்ட தனிப் பெரும்பதி நம் ஆன்ம சிற்றணுவிலே நிலைத்திருந்து நிறை ஆட்சி புரிகின்றோர் என்றால், இந்த ஆன்ம ஏழ்நிலை மாடத்தி.ா உயர் சிறப்பு என்னென்பது! இந்த ஆன்ம நிறை பரிபாகத்திலே, அந்த பதியே பரிபூரணமாகத் திரிதேக சித்தியோடு என்றும் ஆனந்தமாய் வாழும் நிறைமனிதனுய்த் திகழ வருகின்றோர் என்றால் இவ் ஆன்மாவின் பெருமையை எப்படிப்

Koviloor Digital Library

புகழ்வது! இந்த ஆன்ம அகத்திருந்து ஏழ்நிலை அனுபவ வாழ்வு வெளிப்பட்டு விளங்கச் செய்ய யாவையும் ஆணை செய்து கொண்டுள்ளார் நம் அருட்பெருஞ் ஜோதி பதி. அச் செயல் வெளிப்பாட்டை இனி படிப்படியாக மேல் வரும் கண்ணிகளில் கண்டு தெளிந்து கொள்ளுவோம்.

6 ஒர்நிலை தன்னில் ஒளிர்முத்து வெண்மணி
சீர்நீலம் ஆச்சுதடி — அம்மா
சீர்நீலம் ஆச்சுதடி

ஆன்மாவினின்று முதற்படியாக திருவருட் சக்தி வெளியாகின்றது. இது நிர்மலமானது தூய்மையானது, வெண்மை வண்ணமாகும். ஆனால், வான்வெளி நிறைவிலே இறை அருள் வெள்ளொளி, நீல வண்ணக் காரொளியாக நிறைந்து தோற்றிக் கொண்டுள்ளதாம். இது தான் இங்கு வெண்முத்து தானே, நன்னீலமாக மாறித் தோற்றுகின்ற தாய்ப்புகலப் பட்டுள்ளது.

பிண்ட தேகப் படைப்பிலே, ஆன்மாக்கரு, அன்னை வயிற்றில், ஆணியல் சுக்கில சத்தும் பெண்ணியல் சுரோணித சத்தும் கலந்து செயல்படும் போது, அவ் ஆன்ம சிற்றணுவைச்சூழ, அகப்புறக்கூறு வெளிப்பட்டு வளரத் தொடங்குகிறது அகக்கூறில், ஆன்மதத்துவப் பிரகிருதி, ஆகாசம், ஆன்ம உணர்ச்சியும், புறக்கூறில் பெண்ணியல் அம்சப்பிருதிவி, அப்பு, தேயு, இயமானன் என்னும் வாயு தத்துவமும் பிரணவச் சுழற்சியாய் இயக்கமுண்டாகிக் கருவளரத் தொடங்குகின்றது. அக் கருவுட் சுக்கிலாம்ச பிரகிருதி தத்துவமே வெண்முத்துவாய்த் தோற்றி சீர்நீலமாய் விளங்கலாகியுள்ளதாம். இதிலே தான், திருவருட் சக்தியின் செயற்பாடு, அபக்குவநிலையில் மாயையின் தோற்றமாகக் காணப்படுகிறது. இதனால்தான் சிவசக்தி, நீலவண்ணமாய் விளங்கக்காண்ப தோடு. திருமால், நீலவண்ண கண்ணனையும், சுவேத (வெள்ளை) நாராயணனையும் தத்துவ

Koviloor Digital Library

கற்பனை செய்யப்பட்டுள்ளது. அண்ட இராசி மண்டலத்தில், நீலச்சனி வான்பூதத்திற்குரிய தாய்க் கண்டுள்ளனர். அருட் பெருஞ் சித்திவடிவில், சிதாகாசவான் பொருள் கலந்த ஞான தேக வண்ணமாய் அனுபவிக்கப் படுவதாம்.

அடுத்து இரண்டாவது நிலைக்காட்சி குறிக்கப்படுகின்றது

7 பாரோர் நிலையில் கருநீலம் செய்ய
பவளம(து) ஆச்சுதடி—அம்மா
பவளம து) ஆச்சுதடி.

கருநீலமாய்த் தோற்றிய வானக்காட்சி சிறிது நேரத்தில் துவர்வண்ணப் பவளநிறக் காட்சி தோன்றுகிறது. இது கீழ்வானிலே தோற்றுகின்ற அருணோதய வண்ணமாம். இவ் அருண ஜோதியை அணிந்து பாடாப் புலவரும் உண்டோ!

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"
(திருமுருகாற்றுப்படை)

நீலவானில் சூரிய ஜோதியைக் கண்டு, நீலமயில் மீது ஏறிவரும் பாலமுருகனின் காட்சியாகக் காண்கின்றனர் முருக பக்தர்கள். இருண்டுகிடந்த கார்வண்ணப் பார்மீது, செந்தீ வண்ண ஜோதி முருகன் தோற்றத்திற்கு ஒரு கற்பனைக் களமாக இக்காட்சிக் கண்ணி அமைந்துள்ளது.

செவ்வாய்க் கோளும், அதற்குரிய இரத்தினமாம் பவளமும் வானச் சோதி நூலார் ஓர்ந்து அளித்துள்ளனர்

சன்மார்க்க சித்தியில் சுத்த பிரணவ தேகத்தைச் சுட்டுவதாகக் கொள்ளப்படும். மேல்:

8. மற்றோர் நிலையில் மரகதப் பச்சைசெம்
மாணிக்கம் ஆச்சுதடி — அம்மா
மாணிக்கம் ஆச்சுதடி.

Koviloor Digital Library

இங்கு அருட்சக்தியே, சுத்த வடிவம் அருளும்போது பச்சைக்கும் சிவப்புக்கும் இடையிட்ட தோற்றமாக வெள்ளொளி தோற்றுவதை யுணர்த்துகின்றது. பச்சை குளிர்ச்சியானது, செம்மை வெம்மையானது. இது உள்ளிருக்கும் உயிருக்கும், புறஞ்சூழ்ந்த உடலுக்கும் இடையில் அறிவு அம்சமாய் விளங்கி முடிவில், ஞானனுபவத்தே சுத்த அமுத வடிவாய் ஒருவனை வாழ்விப்பதாயுள்ளது, சுத்த சன்மார்க்க அனுபவம்.

மணிவாசகரின் காட்சியில், இது, "மரகதக் குவால் மாமணிப்பிறக்கம்," எனத் தோற்றியுள்ளது. மாணிக்க வண்ண சிவஜோதிக்கும், மரகத வண்ண சக்தியாம் உமாதேவிக்கும் இடைவிளங்கும் கந்தவேளே, சுப்பிரமணி வண்ணனுகக் காட்சிபெறப்பட்டுள்ளது இதுவே சோமாஸ் கந்த தத்துவமாம். நம் சுத்தநெறியில் உயிருக்கும் உடலுக்கும் இடையில், தூய மனத்தில் சுத்த அன்பு தோற்றி, அகத்தையும் புறத்தையும், இரண்டறச் செய்து அனக கனக வடிவமாம் சுத்த தேக சித்தியையுணர்ந்தும் காட்சியாக இதனைக் கொள்ளலாகும்.

பச்சை வண்ண பராசக்தியே பரந்தாமனும் திருமால் ஆகவும், கிரகங்களிலே புதன்தான் அம்மாலாகவும் புனைந்துரைப்பர்.

ஞாயிருகிய சூரியனுக்கு அடுத்து நெருங்கியுள்ளது, இந்த புதனுகிய கோளாம். சூரியன், புதன் இவ்விரண்டுக்கும் மாணிக்கமும், மரகதமும் உரிய கற்களாம். நம் சுத்தநெறியில் ஆன்மாவிடத்திருந்து ஆற்றப்படுகின்ற சுத்த தயவுச் செயலாலே, திரிதேகத்தொன்முன சுத்த வடிவம் பெறுதலே எல்லோருக்கும் அமைந்த தேவையான ஒன்று என அறிதல் வேண்டும்.

9 பின்ஒர் நிலையில் பெருமுத்து வச்சிரப்
பேர்மணி ஆச்சுதடி - அம்மா
பேர்மணி ஆச்சுதடி.

Koviloor Digital Library
2242
R65(வள்)

சென்ற முக்கண்ணிகளில் கண்ட காட்சி எல்லாம் அண்ட ஜோதிநிலை நின்று வெளிப்பட்டு மனிதப்பிறப்பில், பக்குவ காலத்தில் முத்தேக சித்திப் பேரின்பானுபவம் விளைய உதவி நின்றனவாக உணர்த்தப்படுகின்றோம். விண்ணூலாகிய வானசாத்திரமும், சோதிடமும், உண்ணூல் [உள் நூல்] ஆன கடவுட்ஜோதியை யோர்ந்து கொள்ளவே ஆக்கப்பட்டன வன்றி குறிசொல்லி, வருங்காலப் பயன்கூறிப் பிழைப்பதற்கு அன்றாம்:

இதுமுதல், வரும் மூன்று கண்ணிகளில், அக விளைவு பற்றிய குறிப்பும் விளக்கமும், சாகாத்தலை, வேகாக்கால் போகாப்புனல் ஆகியவற்றின் பயனும் வெளியாக்கப்படுகின்றதை இனி முறையாகக் கண்டு கொள்ளப்படும். இந்தக் காட்சியில் பெருமுத்து வச்சிரம் அல்லது வைரம் ஆனதாக சொல்லப்படுகின்றது. இவ்விரு மணிகளும் வெண்ணிறத்தனவே. எனினும் வைரம் முத்தினும் சிறந்த ஒன்றாம். இது முத்தாய்த் தோன்றி, வச்சிரம் ஆக விளைவுகொள்ளலின், அபரம், பரம் ஆக அனுபவப்படும். முத்து சந்திரன் இயலும் வச்சிரம் சுக்கிரன் இயலும் கொண்டனவாம். மேனிலை அனுபவத்தில் சாகாத்தலையால் அடையப் பெறும் ஞானதேக சித்தியைக் கூட்டிவைப்பதாம்.

சாகாத்தலையாவது, ஆன்மாவின் கண்ணின்று ஓர் ஒரு உயிர் வாழ்விலே அறிவு விளைவு தொடர்ந்து பெருகிக் கொண்டே வருகின்றது. எல்லாப் பிறப்பும் கடந்து பக்குவ மனிதனில்தான் முழுவிளைவு கொள்ளுகின்றது. முடிவிலே, சாகா நிலை பெற்ற சன்மார்க்கியில், ஞானதேகமாக, சர்வ ஞானத்தோடு, சூழவருபவர்க்கு இந்த ஞானதேக சித்திபெற உதவிக்கொண்டிருப்பதாம். ஆகவேதான், ஆன்மாவுக்குள்ளிருந்து விளைவுற்ற இந்த ஞானசக்திக்கு சாகாத்தலை என்று பெயராயிற்று.

யோகஞான சித்த மார்க்கத்தில் பரிபாஷையால், மருத்துவம், மந்திரம், தந்திரம் முதலியவற்றிலும், இச் சாகாத்தலை

Koviloor Digital Library

முதலானவைகளைக் கூறிவைத்துள்ளனர். அவற்றில் பற்று கொண்டு முயன்றும் அற்பப்பயனே அடையக் கூடும். ஆகையால், அவைகளில் லட்சியம் வைக்காது, ஒருமையும் தயவும் கொண்டு ஆன்ம நிலையுற்று அனகமாய் வாழ்வதால் மேலான இன்ப வாழ்வு பெற்று ஓங்கலாம்.

10 வேறோர் நிலையில் மிகும்பவளத்திரள்
வெண்மணி ஆச்சுதடி — அம்மா
வெண்மணி ஆச்சுதடி.

இதில், செம்பவளத்திரள்போன்ற வடிவின் மீது, வெள்ளைத் திருநீறு மூடியது ஒப்ப, ஓர் ஆன்மக் காட்சி தோற்றியுள்ளது. சுடலைப் பொடி பூசிய சிவகற்பனைக்கு ஆதாரம் இதுவானது. இச்செம்பொருட் ஜோதியே மேனிலையில், ஆன்ம அகத்தில் நித்தியமாய்த் திகழ்வது, கீழ்நிலை அல்லது புறத்தில் உயிர்ச் சக்தியாய் உடம்பிடை காரியப் படுவதாம். இதனையே, சிவமே வாசியாய் செயல் படுவதாகக் காண்கின்றனர். இவ்வுயிர்ப்புச் சக்தி ஆன்மாவின்கண் அனாதியே மறைந்திருந்து ஓர் ஒரு உயிருடம்பு சூழ் பிறவிகள் தோறும் பக்குவப்பட்டு வருகின்றது. இந்த உயிர்ச் சக்தியைத் தான் வேகாக்கால் என்பர்.

கால் என்பது காற்று. மனிதனில் ஜீவ சுவாசமாம் மூச்சுக்காற்று பிறப்பு உண்டாம்போது, ஆன்மாவினின்று விரிந்து செயல்படுகின்றது, அது சுருங்கி, உள்ளொடுங்கும் போது மரணம் ஏற்படுகின்றது இப்படி, ஓர் ஆன்மாவுக்கு எண்ணற்ற உயிருடம்புகள் தொடர்ந்து வருவதும் போவதுமாய் இருந்து முடிவிலே, அக்காலே அருள் ஆண்டவரின் திருவடி அனுபவமாய் நிலைகொண்டு விடுகிறது சுத்த சன்மார்க்க நித்திய வாழ்வில்.

புறத்திலே காற்றாய் வீசிக்கொண்டிருக்கும் ஒன்று, இந்த மனிதப்பிறப்பிலே ஆன்ம சக்திச் சேர்க்கையால், அருள் விளைவுற்று நித்திய ஜீவனாய் விளங்க வருவதாம் சிவ

Koviloor Digital Library

ஜோதியே, வாசிநாதனாய், குருவாய் விளங்கி, ஆன்மாவுக்கு ஆனந்த வாழ்வைச் சேர்ப்பது உண்மையாகும்.

அம் தழல் மேனி சிவஜோதிப் பரம்பொருளே, ஒவ்வொருவருக்கும் குருவாய் இருந்து பக்குவப்படுத்தி உய்யச் செய்தல் உண்மையே. பிண்டத்தே இப்படி விளங்கும் சிவ குருவைச் சுட்டியுணர்த்தவே அண்டவானில் வியாழனும் குருக்கிரகம் செவ்வொளியும் வெள்ளொளியும், செம்பொன்னொளியாய்த் தோற்றி விளங்கிக் கொண்டேயுள்ளதாம். முடிவில், அருட்சக்தி, சன்மார்க்கியில் பிரணவ தேகானுபவ சித்தியோடு என்றும் திகழ்வதாம்.

11. புகலோர் நிலையில் பொருந்திய பன்மணி
பொன்மணி ஆச்சுதடி — அம்மா
பொன்மணி ஆச்சுதடி.

இக்கண்ணியில் பல்வேறு மணிகளும் வீசும் கதிர்கற்றைக் கூட்டொளிக்கலவை பொன்னொளி மயமாய்க் காணப்படுவதாய் கூறுகின்றார். எப்பூத அணுவகத்தும் அருட்பொன் ஒளியுண்டு என்பர் நம் வள்ளற்பெருமான், 'காற்று, அனல், ஆகாயம் எல்லாம் கலந்த வண்ணப்பொன்னே, என்றுள்ளார். குணசகிதனையும், குணரகிதனையும், குணாதீதனையும் உள்ளவர் கடவுள். இப்படி இருந்துதான், பக்குவியைத்தன் போல் நிறை வாழ்வு பெறச் செய்கின்றார் தக்க காலத்திலே, இதில் கிடைப்பதுதான் பொன்னுடம்பு ஆம் சுத்ததேகம். இது என்றும் நித்தியமாய், வாடாது, சுருங்காது, காயாது, அழியாது, பொற் கற்பகக் கனிபோல், சன்மார்க்கியை நிலவச் செய்வதாம். இந்தக் காயாத காயசித்தி அளிக்கும் அருள் அமுதம் ஆன்ம அணுவகமிருந்து பெறப்படுவதாம். இந்த ஆன்மாவே அமுத கலசம் என்பர்.

ஒவ்வொரு பிறவியிலும், ஆன்மாவின் உள்ளிருந்து அருளமுத சக்தி சிறிதளவு வெளிப்பட்டுப் புறநீராதி கொண்டு வளர்ந்து, பக்குவமடைகின்றதாம். புற ஊன்

Koviloor Digital Library

விடுத்து, அருளமுதம் உண்டு நித்திய தேகத்தில் வாழ்பவனே சுத்த சன்மார்க்கி,

"ஓங்கார மான கலசத் தமிர்துண் ணில்
போங்கால மில்லை புரிந்து." (ஔவை ஞானக்குறள்.)

இந்த அமுத நன்னீரைத்தான் போகாப்புனல் என்கின்றனர் யோக ஞானசித்தர்கள்.

இந்த மனிதனின் சிரநடு முகுளமேல், பகரவடிவக் குழியிடத்தே ஜீவநன்னீர் ஊறியுள்ளது. இதற்கு மேல்தான் ஆன்மநிறைமதி ஒளிர்கின்றது. இம்மதி அமுத சக்தியால், அந்நீரில் தெய்விக ஆற்றல் விளங்குகின்றது. அது கொண்டு, யோக சாதன முறையிலும், மருத்துவத் துறையிலும் சில பயன் கண்டுள்ளனர் முன்னோர் பலர். ஆனால், சுத்த சன்மார்க்கத்தில் தான், மனிதன் ஆன்ம அகமிருந்த வண்ணம் அமுதமய நிறை ஆற்றலொடு, அனக நிறை வாழ்விலே நித்தியமாய் விளங்க வல்லவனாகின்றான் என்பது வள்ளல் அனுபவம்.

நிறைமதி ஒளிநிகழ் ஆன்மானுபவத்தோடு வாழவைப்பது. அம்மதியிற் கலந்த முக்காற்பங்கு வெண்ணிறத்தோடும் காற்பங்கு பொன்னிறத்தோடும் விளங்கும் அமுத ஜோதியே, திரிதேக சித்தியைத் தருவது. உலகறி குறைமதியும், அதன் சந்திரிகையின் அற்புத ஆற்றலும் புறவாழ்வில் அனுபவ விளைவுக்கு உதவ வழங்கப்பட்டனவாய் அறியலாகும்.

12. பதியோர் நிலையில் பகர்மணி எல்லாம்
படிகம(து) ஆச்சுதடி — அம்மா
படிகம(து) ஆச்சுதடி.

படிகம் அல்லது படிகமணி என்பது நிறமற்ற ஒன்றும். இதன் முன் எந்த விதமான வண்ணத்தை வைத்தாலும், அவ்வண்ணமாகவே தோற்றும் அப்படிகம். முப்பட்டைக் கண்ணாடி (Triangular Prism) ஒரு படிகமே. இதன் விளிம்பில் படும் சூரியக்கதிர் ஒளியை ஒரு சுத்தத்திரையின்மேல் பிரதி

Koviloor Digital Library

பலிக்கச் செய்தால், ஏழு வண்ணங்களைக் காண்போம். நிறமற்றதாய்த் தோற்றும் சூரிய ஒளியில் ஏழ்நிறம் இருப்பதை நிறமாலையாக பலரும் கண்டிருக்கின்றனர். இது போல் நம் சுத்த ஆன்ம மணியின் ஜோதியிலும் ஏழ்நிலைத் தத்துவம் நிரம்பியுள்ளதையே இம்மனிதப் பிறப்பில் அனுபவ வாயிலாக காண்கின்ரும். இதனைப் புறந்தும் அகத்தும் நன்கு விளங்கிக் கொள்ளவே இந்தக் காட்சிக் கண்ணி மூலம் யாவையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார் இங்கு.

பரமான்ம ஜோதிபதி தன் உண்மையை முற்றுமாக இந்த ஜீவான்மாவாகிய சுத்தப் படிகத்திலே பிரதிபலிக்கச் செய்து காட்டுகின்ருர்.

"சுத்தப் படிகம் உச்சிச் சூரியனைச் சந்தித்தால
எத்தன்மை அத்தன்மை ஈசன்னிலே"

என்ருர் முன்னோர். படிகத்தில் நிறம் ஏதும் இயற்கையில் இல்லை. அது போல் சுத்த ஆன்மாவிலும் நிர்மலமானது. அதிலே கடவுளரின் அல்லது பரமான்மாவின் பூரண உண்மை வெளிப்பட்டு, ஏழ் இயல் அனுபவத்தோடு திகழும் போது, இவன், அவனாகத் திகழுகின்ருன் என்பதை யுணர்த்துவது இந்தக் காட்சி.

உண்மை அருள் அனுபவத்தில், ஆன்ம தற்போதம் ஒழிந்து ஆண்டவர் மயமாகி, தயாவண்ணமாய் வாழத் தொடங்கும் போது தெய்விக ஆற்றலும், அற்புத சக்தி சித்திகளும் வெளியாகும். ஆனால் ஓர் அளவு அருள் விசேடத்தால் சில அற்புத ஆற்றல் சித்துச் செயலாய் வெளியாகும் போது, அகங்கார போதத்தால் மயங்கி, மருளிலும், இருளிலும் வீழ்ந்திடாது இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை செய்யவே மேல் வரும் கண்ணிகளில் காட்சிகள் அமைந்துள்ளன. அப்படி எதனாலும் மயங்கிடாது மேற் சென்று பேரின்ப சித்திப் பெரு வாழ்வு பெறுகின்ருர் நம் பெருமான். இனி, மேற் கண்ணிகளைப்பார்ப்போம்.

Koviloor Digital Library

13 ஏழ் நிலை மேலே இருந்ததோர் தம்பம்
இசைந்த பொற் தம்பமடி – அம்மா
இசைந்த பொற் தம்பமடி.

இதுகாறும் ஆதார நிராதார நிலை மேல் திகழும் ஏழ் நிலை ஆன்மாவைச் சார்ந்து நின்று திருவருளாற் கண்ட காட்சி எல்லாம் ஒருவாறு விசார ஞானத்தால் வெளிப் பட்டனவே ஆம். சுத்த சன்மார்க்கத்தில் இந்த அண்ட பிண்ட விசாரம் நிகழும் போது இது போன்ற காட்சிகள் தோற்றல் இயல்பே பிறயோக ஞானுனுபவிகளும் பல காட்சிகளை அவரவர் அக விளைவுக்குத் தக கண்டு வெளியிட்டுள்ளார்கள். ஆனால், நிறை ஜீவதயாவொழுக்க சுத்த சன்மார்க்கம் அல்லாத நெறிமுறையில் வெளியான காட்சிகளால் பேரின் பானுபவ சித்தி வாழ்வு எவர்க்கும் முன்பு கிடைக்கவில்லை.

நம்பெருமானுக்கு அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் அழியா இன்ப வாழ்வு அருளவே பேர் அற்புதக் காட்சிகளை எல்லாம் காட்டி மேல் நிலைக்கு ஏற்றி வைத்து உலகமெல்லாம் கண்டானந்திக்கத் துணை புரிந்துள்ளார். இவர் பாடியுள்ள "மெய்யருள் வியப்பிலே" மேல் நிலை ஏறும்போது ஏற்பட்ட அனுபவத்தை ஒரு நூறு செய்யுள்களில் வியந்தோதியுள்ளார். அதில் முதல் பாடலே, தன்னிகரற்ற தம்பத்தில் மேலேறும் போது உற்ற காட்சிகளை எவ்வளவு வியக்கின்றார்!

தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்பம் ஒன்றதே
தாவிப் போகப் போக நூலின் தரத்தின் நின்றதே
கனக்கத் திகைப்புற் றங்கே நானுங் கலங்கி வருந்தவே
கலக்கம்நீக்கித் தூக்கி வைத்தாய் நிலை பொருந்தவே

மேலும் ஓரிடத்தில், இத்தம்பத்தை மேறுமலை மீது ஓங்கி விளங்கும் கம்பமாகவும், அதன் மேல் இருந்து திருவருளால், மேல் உலகை எல்லாம் ஆளும் காட்சியைக் கண்டு அதிசயிக் கின்றார், அது:

Koviloor Digital Library

"மேருமலை உச்சியில் விளங்கும் கம்ப நீட்சி
மேவுமதன் மேலுலகில் வீறுமர சாட்சி
சேருமதிற் கண்டபல காட்சிகள்கண் காட்சி
செப்பலரி தாம் இதற்கென் அப்பனருள் சாட்சி"

என்பதில் மேருமலை என்றது, நம் வீணாதண்டமாகிய முதுகெலும்பு. இதன் மேலே ஆன்மத்தலத்தேதான் இந்த ஜோதிக் கம்பக் காட்சி தோற்றி விளங்குகின்றதாம்.

மேரு பொன்மயமானது, மேல் ஓங்கிவளர்கம்பமும் பொன் தம்பமாய்த்திகழ்தல் வியப்போ? வியப்பன்று! சுத்த ஆன்மாவும் பொன் ஒளி வண்ணமாகக் கண்டு கொண்டுள்ளனர் முன்னோர். அருளாலே இக் கம்பமேல் ஏறிக் காணும் காட்சியை அடுத்த கண்ணியில் விரிக்கிறார்.

14 பொற்றம்பங் கண்டேறும் போதுநான் கண்ட
புதுமைஎன் சொல்வனடி — அம்மா
புதுமைஎன் சொல்வனடி.

கீழ், ஜோதித்தானமாகிய சுவாதிட்டானத்திலே, யோக சாதனையால், குண்டலி சக்தி ஏறிய போது. சில காட்சியும், அற்ப சித்திகளும் விளங்கும். அதனைக் கண்டு களித்து கழிந்து போகின்றனர் யோகிகள் பலர்.

மேல்நிலை நிராதாரத்திலே, அருள்ஞான சித்தர்பெறுங் காட்சியின் மாட்சியே இங்கு பேசப்படுகின்றது. தயா ஓர்மையோடு, ஆன்ம ஜோதியை நினைந்து ஒன்றி உருகிடும்போது இப் பொற் ஜோதித் தம்பக் காட்சி தோற்றிடுவதாம். இதன் மீது ஏறுவது அருளாளர்க்கே கூடும். நம் வள்ளலார்க்கு திருவருள் மிக உதவியதால் அதில் மிக எளிதில் ஏறி மேலே மேலே செல்லுகின்றார். மேலான காட்சிகள் யாவும் காண்கின்றார், கவினுற எடுத்து எடுத்து உரைக்கின்றார். சித்தர்மார்க்கத்தில், இது பொற்றம்பமாய் இல்லை, நெருப்பாறின் மீதுள்ள மயிர்ப்பாலமாகக் காட்சியாகி உள்ளதாம்.

Koviloor Digital Library

அப்பாலத்தின் மேல் செல்வது எவ்வளவு பயங்கர அபாய மானது! அப்படிப்பட்ட பாலத்தின் மேல் சென்றவர்கள் என்ன தெய்வீகக் காட்சியைக் கண்டார்கள், விண்டார்கள், பயன் கொண்டார்கள் என்பதற்கு ஒரு சான்றும் காணேம் !

நம் ஜோதி வள்ளல், அருட்பெருந் துணையால், நுணுகி நுணுகியோங்கி வளர்ந்துள்ள பொற்றம்பமேலே சற்றும் அஞ்சாது, தடுமாருது ஏறிஏறி மேற்செல்லுகின்ருர். இந்தப் பொற்றம்பத்தினைப் பற்றியும், இதில் ஏறும்போது நேரும், காட்சிகளும் அனுபவங்களும் தொடர்ந்து, 15 முதல் 19-வது கண்ணிவரை ஒரே அடியாய் விளக்கப்பட்டுள்ளதால், அதன் உரை விளக்கமும் ஈண்டு ஒரே தொடராய் விரித்தும் தொகுத்தும் விளக்க நேருகின்றது. அடுத்து ஐந்து கண்ணிகள் ஒன்ருகவே எடுத்துக்கொள்ளப்படுகின்றது

15 ஏறும்போ தங்கே எதிர்ந்த வகைசொல
என்னள வல்லவடி — அம்மா
என்னள வல்லவடி.

16 ஆங்காங்கே சத்திகள் ஆயிரம் ஆயிரம்
ஆகவந் தார்களடி — அம்மா
ஆகவந் தார்களடி.

17 வந்துமயக்க மயங்காமல் நான்அருள்
வல்லபம் பெற்றேனடி – அம்மா
வல்லபம் பெற்றேனடி.

18 வல்லபத் தால் அந்த மாதம்பத் தேறி
மணிமுடி கண்டேனடி — அம்மா
மணிமுடி கண்டேனடி.

19 மணிமுடி மேலோர் கொடுமுடி நின்றது
மற்றது கண்டேனடி — அம்மா
மற்றது கண்டேனடி.

Koviloor Digital Library

650307

இவ்வைந்து கண்ணிகளிலே பெறும் காட்சி, உலகியலார்க்கு எத்தனை விதமான சோதனைகளையும், வாதனைகளையும் தந்து வேதனையுண்டாக்குகின்றது என உணர்த்தப்பெறுகின்றது இவ்வளவும் கீழ்நிலை மூலமுதல் விசுத்திவரை ஓர் யோகி பெறும் அனுபவங்களே என அறிய வேண்டும். மாருக நம் வள்ளலார்க்கு, மேல்நிலை அனுபவ வெற்றிப் படிகளாகவே அமைந்துள்ளனவாம் இவை. இக்கண்ணிக் காட்சிகள், கீழ்நிலையைப்பற்றி லேசாகக் குறிப்பு காட்டி விட்டு, மேல் நிராதார நிலை அனுபவத்தையே வள்ளற் பிரானுக்கு வழங்க வந்தனவாகக் காண்கின்ருேம். எனவே அவர் அகத்தே தம்பமேனிலையில் இருந்து கொண்டே அனகத்து உலக வாழ்விலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்.

வாழ்வில் ஒவ்வொன்றும் அக அனுபவ விளைவுக்காகவே புறத்தும் செயல்கள் நிகழ்கின்றனவாம் அகவாழ்வின் திறன் அளப்பரிது எனவும், எதிர்ந்து வரும் எதுவும் முடிவில் அடிபணிந்து போவதே கண்கூடு எனவும் தோற்றுகின்றது. முடிவில் வெற்றியே பெறுகின்ருர் பெருமாஞர் என்பது 15வது கண்ணியின் மையக் கருத்து.

ஆயிரக்கணக்கான சக்திகள், இரண்டாம் நிலையில் ஏறும்போது முன் வந்து, பலவாகிய உருக்காட்டி உள்ளத்தை ஈர்க்கின்றன. ஆனல் அவை ஒன்றையும் ஏறெடுத்துப் பார்க்கின்ருர் இல்லை நம் அடிகளார். அவர்களின் தோற்ற உருநலம் கண்டு உருகிவிடவும் இல்லை! விசித்திர உருக் கண்டு வியந்திடவுமில்லை! கோர உருக்கண்டு அருவறுத்து வெறுத்திடவுமில்லை! மாருகத் தயவோடு எவரையும் நோக்கி நலம் விளைவிக்கவே வேண்டிக் கொண்டிருந்தார். இது 16-வது கண்ணிக்காட்சியின் அனுபவ விளைவு.

மாயாமயக்கஞ் செய் தோற்ற வடிவங்கள் முற்பட்டு, திடசித்தமில்லாத சபலமன முடையாரை மயங்கிடச்செய்து துன்பிலே ஆழ்த்திவிடும். அப்படி இல்லை நம் பெருமான். நிறை அருள் ஆற்றல் பெற்றவர், அவ்வருள் வல்லபத்தால்,

Koviloor Digital Library

யாரையும் எதையும் கண்டு மயங்காமலும், உள்ளத்தில் சற்றும் களங்கமும் சலனமும் இல்லாமலும் அருள் அனுபவத்தில் மேலே மேலே ஏறுகின்றார் நம் அருட்பிரகாசர். இது 17-வது காட்சிக் கண்ணியின் அனுபவக் குறிப்பு.

அந்தப் பேரருள் ஆற்றல்தான், இவருக்கு, அப்பொற்றம்பத்தின் முடிநிலைக்கு ஏற்றிவிட்டதாம். இப்போது மேல் தளத்திற்கு வந்து விட்டுள்ளார். இந்த இடம் நல்ல ஒரு விரிந்த பரப்புத் தலமாகத் தோற்றுகின்றது. என்ன! ஒரு பொற்றம்ப மேலே இப்படியும் இருக்குமா என்று நம்ப முடியாது வியக்கின்றோம்! இது பதினெட்டாம் கண்ணியின் காட்சி விளக்கமாம். இக்காட்சித்தலம் ஒரு மணி முடியாக விளங்குகின்றதாம். இந் நிலைக்கு மேலே, குறுகிய ஒரு கொடுமுடி எழுந்து நின்றது விளங்கக் காண்கின்றார் 19-வது கண்ணிக் காட்சியாக.

இக்கொடு முடிக்காட்சி ஓர் உயர் கட்ட அநுபவமாகும். இது ஜோதித்தம்பத்தின் முடிநிலைத்தலமாகும். இம் முடிநிலை மொட்டையாய் இருக்கவில்லை, முக்கியமான பிறிது ஒன்று கொண்டு விளங்குகின்றது என்ற கருத்தை வழங்க வந்தது. 'கொடுமுடி நின்றது' என்று கூறினதோடு, 'மற்றது கண்டேனடி' என வியன் மொழியாற் சுட்டப்பட்டுள்ளது ஈண்டு. இதுவரை பொற்றம்ப நிலையைப் பற்றிய விபரம் தொடர்ந்து விரித்துக் கூறி, அடுத்த காட்சி நிலைக்கு அழைத்துச் செல்லப் படுகின்றோம்.

20 கொடுமுடி மேலாயி ரத்தெட்டு மாற்றுப் பொன்
கோயி லிருந்ததடி—அம்மா
கோயி லிருந்ததடி.

பொற்றம்பமேல் நிலை, ஆறுதாரங்கடந்த நிராதார ஏழா நிலை; இது முது கெலும்பு மீதுற்ற முகுள மேல் நிலையுமாகும். இதற்கு மேலே ஆயிரத்தெட்டு மாற்று பொற்கமலத் தளியாம் கோயில் இருக்கின்றதாம். இதற்குமேல் சிதாகாச சிற்ஜோதி

Koviloor Digital Library

வான் கவிகை விதானமாய் விளங்குவது. இங்குதான். எங்கும் நிறை மாற்றறியாத் தெய்வஜோதி, 1008 மாற்று கொண்டதாய்த் தத்துவ சித்தி அனுபவத்தின் பொருட்டு திகழ்ந்து கொண்டுள்ளது. இங்குள்ள ஆயிரம் இதழ் கமல நிலையும், சூழ் ஆகாச அகரநிலை எட்டும் கூடித்தான் ஆயிரத் தெட்டு மாற்றுப் பொன்னாகப் புகலப்படுவது. மேலும் ஆயிரம் என்பது, எண் எழுத்தின் முடிவான தத்துவ மகரமெய் ஜோதிநிலைக் குறிப்பேயன்றி வெற்று எண்ணிக்கை மட்டு மல்ல.

ஆதலின், மேற்படி தத்துவ உண்மை கொண்ட 1008ஐ நிறை ஞான சித்தர்கள், 96 தத்துவத்தால் பகுத்தறிந்து $\left(\frac{1008}{96} = \right)$ $10\frac{1}{2}$ மாற்று இரகசியத்தை மறை பொருளாய்க் கூறியுள்ளார்கள். சிவபர ஞானத்தால் ஆய்ந்தவர்கள் $\left(\frac{1008}{16} = \right)$ 63 நாயன் மார்களின் தத்துவ கற்பனை வரலாற்றைத் தந்துள்ளனராம். நமக்குச் சத்திய ஞான நிலையில், இத்தலம் அருட்பெருஞ்ஜோதிப் பொற்கோயிலாகத் திகழ்கின்றது. இதுசமயம், இக்கோயிலில் வளர் அருட்பெருஞ் ஜோதியே அபயம் தந்து ஆட்கொண்டது நம் பெருமானுக்கு. இக்கருத்தே "சபையெனது உளமெனத் தான் அமர்ந் தெனக்கே அபயம் அளித்ததோர் அருட்பெருஞ்ஜோதி",என்று குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வருட் பூங்கோயில் முன் உற்று நின்று காணும் காட்சி அடுத்து குறிக்கப்படுகின்றது.

21 கோயிலைக் கண்டங்கே கோபுர வாயிலில்
கூசாது சென்றேனடி —அம்மா
கூசாது சென்றேனடி.

இங்கு காணப்பட்டுள்ள பெருங்கோயில், வடலூர் ஞானசபை போன்றது அல்ல, உயர்கோபுரமுடைய நெடுங்கோயிலாகும்! இவ்வாயிலின்முன் எத்தனையோ ஆன்மாக்கள் வரிசை வரி

Koviloor Digital Library

சையாகவும் மௌனமாகவும் எதையோ எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கிறார்கள்! நடுவே வழிவிட்டுத்தான் இருபுறமும் குவிந்துள்ளனாராம். இவர்களில் எவரையும் சற்றும் கவனியாமலும், லட்சியம் பண்ணாமலும், கூசாமலும் நம்பெருமான் உட்செல்லுகின்றார். யாரும் எதுவும் பேசாது பார்த்துக் கொண்டேதான் நிற்கின்றார்களாம்! இவரது இயலும் செயலும் குறிக்கோளும் யாரே அறிவர்! இவர் கண்ட காட்சி திருச்சந்நிதியின் பெருமைதான்.

இதை அடுத்த முக்கண்ணிகளிலும், கோபுர வாயிலின் உள்சென்ற போது, எதிர்படுகின்ற, சக்தி சத்தர்கள், தேவர் மூவர்கள், பஞ்ச கர்த்தாக்கள் ஆகியோரின் காட்சியே ஆம்.

22 கோபுர வாயிலுட் சத்திகள் சத்தர்கள்
கோடிபல் கோடியடி — அம்மா
கோடிபல் கோடியடி.

23 ஆங்கவர் வண்ணம்வெள் வண்ணம்செவ் வண்ணமுன்
ஐவண்ண மாகுமடி — அம்மா
ஐவண்ண மாகுமடி.

24 அங்கவர் எல்லாமிங் காரவர் என்னவும்
அப்பாலே சென்றேனடி — அம்மா
அப்பாலே சென்றேனடி.

கோபுர வாயிலின் உட்புகுந்து பார்த்தால், எத்தனை விதமான சக்திகள், சத்தர்கள் கோடி கோடியாகக் காத்திருக்கின்றார்களாம். இவர்கள் எல்லாம். மறங்குலவும் அனு ஆன்ம தேவதேகிகள் என்று உணர்த்தப் பெறுகின்றார் அவர்கள் தான் பொதுவாக ஐவண்ணத்தார் எனப்படுகின்ற தெய்வீக தவசிரேஷ்டர்கள் ஆவர். இவர்கள், பஞ்ச கிர்த்தியமாம் ஐந்தொழில்செய் பஞ்சமூர்த்தி வர்க்கத்தினர்கள் என்றும் தெளியலாகும். இங்கு ஐவண்ணத்தினர் என்றது, ஐந்துநிறத்தவர்களாகக் கொள்ளப்படாது,ஐவகை இயல்பினர் என்று கொள்ளுதல் பொருந்தும்

Koviloor Digital Library

இவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்க, நம் வள்ளல் விரைந்து உள்ளே சென்று கொண்டிருக்கின்றார். அதிசயித்து, பிரமித்து நின்ற அத்தேவர்கள், "இது யாரு! யாரு!" எனத் தமக்குள் கேட்டுக் கொள்ளுகிறார்களாம். இவர்களுக்கு அச்சமயம் ஏதும் புரிந்து கொள்ள முடியவில்லையாம்! முடிவிலே, பிற்காலத்திலேதான், மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று, ஐந்தொழில் செய் நிறை ஆற்றலும் கொண்டு இறைமகனாய் முடிசூட்டப்பெற்ற தருணம் தான், இவரது பெருமை தெரிந்து பெரிதும் போற்றுகின்றவர்கள் ஆயினர் என்பதை, வள்ளற் பெருமானே கூறுகின்றார்.

இப்படி : "தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு!"
"சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு!"
"இன்னமுதம் அருத்தினனை ஏழுலகும் போற்ற!"

இவைபோன்ற புகழ்மொழிகளைத் தற்பெருமைக்காக வெளிப் படுத்தினவாகா அருட்பெரும்பதியின் அருட்பேர் ஆற்றலை யுணர்த்த வந்தனவேயாம். தான்மட்டுமல்ல பிறரும் இப் பேறுகளுக்குரியவர்களே என்பது குறிப்பாகும்.

இப்படி அவ்ஐவண்ண இயல்பினர்களை எல்லாம் கடந்து, செல்லாது சென்று விட்டார் மிக விரைவிலே. அடுத்து வருவது இவ்ஐவண்ணத்தாரின் தலைவர்கள் உறையும் நிலை.

25. அப்பாலே சென்றேன் அங்கோர் திருவாயிலில்
ஐவரிருந் தாரடி — அம்மா
ஐவர் இருந்தாரடி.

முன்னோர்களின் எல்லைக்கு அப்பால் ஒரு திருவாயில் வருகிறது அதனைக் கடந்து உட்செல்லுகின்றார். அங்கு ஐந்து பேர் இருந்தார்களாம். இவர்கள்தான் முன் குறிக்கப்பட்ட ஐவண்ணத்தாரின் தலைவர்கள் ஆவர். பஞ்சமல சகிதராகிய, ஆன்ம கோடிகளுக்குரிய இவ்வைம் பெருந் தலைவர், இச்சை, ஞானம், கிரியை, ஆதி, பரை

Koviloor Digital Library

என்றும் சக்தித் தலைவர் எனப்படுவர். இவர்களே ஆக்கலாதி ஐந்தொழில் செய் பஞ்ச மூர்த்திகளாகவும் அறியலாகும்.

இவர்களின் முன் சென்றபோது, அவர்களே முன்னுற்று வரவேற்று உபசரித்து மேலே செல்லும் வாயிலுக்கு அழைத்துச் சென்று வழிகாட்டுகின்றனர்.

26. மற்றவர் நின்று வழிகாட்ட மேலோர்
மணிவாயில் உற்றேனடி — அம்மா
மணிவாயில் உற்றேனடி.

இவர்கள் தமக்குரிய நிலையில்தான் இருக்க ஆணை செய்யப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வாயிலுடைய உறையுள் இருந்தன. இந்த உறைவிடங்களில் ஆணைப்படி தங்கி இருந்தனர். இவர்களின் நிலையங்களுக்கு வேருக மேனிலைக்குச் செல்லும் ஒரு திருவாயில் இருந்தது. அவ்வாயில், ஒளிவீசும் இரத்தினக்கற்கள் இழைத்த அணிமணிவாயிலாக இருந்ததாம். இங்கு இருந்து ஒருவர்தான் மேற்குறித்த ஐவர்களுக்கும் தலைவர் ஆம்.

27. எண்ணும் அவ்வாயிலில் பெண்ணேடாணுக
இருவர் இருந்தாரடி - அம்மா
இருவர் இருந்தாரடி.

முதலில், இங்கு ஒருவராகத் தோற்றிய தலைவர், பின் அவர்க்குரிய மகாசக்தியாம் தலைவியோடு இருவராகக் காட்சி அளிக்கின்ருர். இவ்விருவரும் நம்பெருமானைப் பணிந்து வரவேற்று முகமன் கூறி அழைத்துச் சென்று மேல் செல்லுதற்கு அமைந்த அடுத்துள்ள ஓர் அலங்கார வாயிலைக் காட்டுகின்ருர்கள். அதுதான் அடுத்த காட்சியாய் வருவது.

28. அங்கவர் காட்ட அணுக்கத் திருவாயில்
அன்போடு கண்டேனடி - அம்மா
அன்போடு கண்டேனடி.

என்று பெரிதும் வியந்து கூறுகின்ருர்

Koviloor Digital Library

இந்த திருவாயில், மற்றவைகளைவிட சிறப்பான ஒன்றும். ஏன் என்றால், அம்மாளிகையுள் உறைபவள்தான் அன்னையின் மிக்க அன்புடை மாசக்தி தேவியாம். அவளைக் கண்டபோதே உளம் உருகி தெய்விக தயாவுணர்ச்சி நிரம்புகின்றதாம்.

மெய்யான இன்பானுபவம் திருவருள் நிறைவால்தான் கிடைக்கும். அந்தத்திருவருளோ மெய்யான அன்பினால் தான் கிடைக்கப்பெறும். அம்மெய் அன்புதான் நம் வள்ளலடி களின் திருவுள்ளத்தில் சுத்த இரக்கமாக, தயவாக ஆதி முதலே குடி கொண்டிருந்தது ஆகவே, அந்த அருளின்பம் வெளிப்பட இத்த அன்பன்னையின் காட்சி உதவியுள்ளது.

29. அத்திரு வாயிலில் ஆனந்த வல்லியென்
அம்மை யிருந்தாளடி — அம்மா
அம்மை யிருந்தாளடி.

இத்திருவாயில்தான் ஆனந்தவல்லி அம்மையினுடைய விலாசம் தோற்றினது அன்பருள் அகமிருந்துதான் மெய் இன்பமாகிய ஆனந்தம் பெறப்படுவது. அன்பென்னும் விதை யிலிருந்து, வெளியாவது அருட் காட்சியாம் ஒருபடர் கொடித் தோற்றம். அக்காட்சிதான் படர்ந்து பரவுகின்றது. இது தான் இன்ப வல்லி ஆனந்த வல்லி கொடிபோல் எங்கும் படர்வது. இந்த இன்பம் அழிந்துபடும் புறத்தது அல்ல. புறத் தனவாம் ஐம்புலன்வாயில் துய்க்கின்ற இன்பமும் சரி, மனோ கரணத்தில் எழுகின்ற மயக்கின்ப உணர்ச்சியும் சரி உண்மை அல்ல நிலைப்பதும் இல்லை: பொய்த்துப்போம்! மாறாக அகத் திலே, ஆன்ம நிலையத்திலே, தயாபக்குவ நெகிழ்ச்சியால் பொங்கி எழுந்து உள்ளத் துணர்விலே வெளிப்பட்டு அனுப விக்கப்படுகின்ற மெய் இன்பமே, இன்பமாம். இதுவே ஆன்மாவின், அந்தமாகிய ஆனந்தம் என்னும் கனிப் பயன் பெருநிலையாகும். இந்த ஆனந்தக் கொடியிலே பழுத்துக் கனிகின்ற இன்பமே, அழியாத அற்புதானந்த சித்திக்கனி யாம். இதுதான் அருளம்மையாம் பெறப்படும் பொருள்.

Koviloor Digital Library

இதனையே அடுத்து வருகின்ற 30-வது கண்ணியால் வழங்கப் பெறுகின்றோம்

30 அம்மையைக் கண்டேன் அவள் அருள் கொண்டேன்
அமுதமும் உண்டேனடி — அம்மா
அமுதமும் உண்டேனடி.

அருளே ஓர் உருவானவள்தான் அம்மை என்ற உண்மை, சொல்லில் அடங்கியும், அடங்காமலும் உள்ளது! இதனை விரித்தால் விளங்கும். ஆம். அம் என்பதோடு, உகரம் இடையிட்டு விரிப்பின் அ-உ-ம் ஆகும். இதுவே ஓம் எனப்படுவது. ஓம் என்ற சொல், கடவுள் வடிவம், இச்சொல்லின் அகப்பொருள் அருளே எனவும் அறியலாகும். எனவேதான் 'அம்மை' என்பது அருள் இறைவி உண்மையே. மேலும் கடவுள் இயல், அகத்தில் ஒன்றுகிய அருட்பெருஞ் சக்தியாக இருக்க விரிந்த பிரபஞ்சத் தோற்றம் எல்லாம் ஐவண்ணம் கொண்டு திகழலையும் (அம்+ஐ=) அம்மை என்ற சொல் உணர்த்துவதாம்.

இந்த அருள் அம்மையைக் காண்கின்றபோது உள்ளத்திலே ஆனந்தம் விளைகின்றது. இதுதான் அருளமுதம் உண்ணாமல் உண்டதின் உறுபயனும். இந்த அமுதையே 'ஓங்கார கலசத்து அமிர்தம்' எனவும், நிறை அருள் மதி அமுதம் எனவும், உடன் பிறவாமாமலை மருந்து எனவும் பலவாறு கூறியுள்ளனர் முன்னோர் பலர். அருட்பெருஞ் ஜோதி அமுதமாக நம் வள்ளல் உள்ளத்தில் ஊறிப்பொங்கி வழிந்து உலவாத் திரிதேகசித்தி இன்ப வாழ்வையே வழங்கலாயிற்று என்பது உண்மையாம். இக்கருத்தினை யாவும் ஈற்றிர் கண்ணிகளால் இசைத்துள்ளார்.

31 தாங்கும் அவளருளாலே நடராஜர்
சந்நிதி கண்டேனடி — அம்மா
சந்நிதி கண்டேனடி.

Koviloor Digital Library

நிறை அருள் ஒன்றே ஒருவரை, இறைவனின் சந்நிதியைக்கண்டு அடைந்து, பெருவாழ்வையும் பெறச் செய்யும். மற்றபடி ஏகதேசக் குறை அருளுடையோர், கடவுள் திருமுன் சார்வது என்பது உண்மையல்ல. அப்படித்தான் இதுவரை இறையுறை அம்பல முன்னுற்று, எப்படி எப்படியோ வேண்டினவர்கள், தவங்கிடந்தவர்கள், கற்பனைபாவனை செய்தவர்கள் எல்லாம் புறத்திருந்தே வாடி வதங்கி மடிந்தே போயினதுதான் உண்மை! இவர்களின் எண்ணம், தாம் கடவுளுக்கு அயலாய் இருப்பதாகவும், தம் நிலைகெட்டு தம் உடல் விட்டு, தனிப் பெரும் பதியோடு சார்ந்து கலந்து ஒன்றாகிப் போவதே முடிவு; அதுவே கடவுட்சித்தமும் ஆணையும் ஆம் என ஐயமறத் தீர்மானித்திருந்தனர். இதுவெல்லாம் தவறான கருத்து என்பது, நிறை அருளால் வள்ளலார் மூலம் வெளியாகி விட்டுள்ளது. அவர்தரும் சான்று:

" ஐயமுற்றார் எல்லாரும் புறத்திருக்க நான்போய்
அம்பலத்தே திருநடங்கண் டகங்களிக்கும் போது
மையகத்தே பொருந்தாத வள்ளலரு கணைந்து
மடிபிடித்தார் நானுமவர் அடிபிடித்துக் கொண்டேன்
மெய்யகத்தே நம்மைவைத்து விழித்திருக்கின் றாய்நீ
விளங்குகசன் மார்க்கநிலை விளக்குகஎன் றெனது
கையகத்தே ஒரு பசும்பொற் கங்கணமும் புனைந்தார்
கருணையினில் தாயனையார் கண்டாய் என் தோழி"

என்ற அனுபவ வாசகத்தால், இவர் பெற்ற நிறையருள், இவரை அவ்வருளேயாகக் கண்டு கொள்ளச் செய்ததோடு, அவ்வருள் நிலை, அருள் இறைக்கு அன்னியமாகாத, பிரிவுற்றறியாத, உடனிருந்தே என்றும் விளங்குவதை உணர்த்தி அனுபவப் படுத்திவிட்டது. ஆகையால் புறநிலை விட்டு சென்று அகமுடையானை அடைய வேண்டும் என்பது சரி அல்ல எனத் தெளியமுடிகின்றது இதுதான், இங்கு இவர் நிறையருளால், 'தற்போத அகங்காரமாகிய' நான்' என்ற

Koviloor Digital Library

உடற்பற்று நீங்கிய இடத்து, இறையோடிருக்கும் அகநிலை அனுபவத்தோடு, அப்பதியோடு என்றும் பிரிவறஇருக்கும் உண்மையை அனுபவபூர்வமாகக் கண்டு நிற்கின்றார். இந் நிலையில் அருளமுத சக்தியால் அழியாதிருந்து கொண்டு, அப்படி வாழும் வழிவகையை சுத்த சன்மார்க்கமாக வழங்கு கின்றார் உலகுக்கெல்லாம். அந்த அழியாநிலையே திரிதேக சித்தினையுணர்த்த வந்தது, (பொன் + கம் + கணம்) = பொற்கங்கணம் ஆம் ஓர் அடையாளச் சின்னம்.

அருட்பெருஞ்சக்தியால் நடராஜரின் சந்நிதியைக் கண்டதாகச் சொல்லுவதின் கருத்து, வெறுங்கண்ணாற்கண்ட காட்சியை மட்டும் உணர்த்துவதல்ல. அக்காட்சியால் பெறலரும் அனுபவப் பேறையும் சுட்டுவதாக அறியலாகும் அப்படி அவர் ஈற்றில் பெற்ற பெரும் பேறு பற்றிய குறிப்பே, ஈற்றுக் கண்ணியின் கண் வெளிப்படுத்தப் பட்டு விளங்கலைக் காணலாம்.

32. சந்நிதியில் சென்று நான் பெற்ற பேறது
சாமி அறிவாரடி — அம்மா
சாமி அறிவாரடி

காட்சிக் கண்ணியின் முடிந்தபயன், சதானந்த நடமிடும் பதி மயமாகி, நித்தியானந்த வாழ்வொடு என்றென்றும் வாழ்ந்து கொண்டும், பிறரை எல்லாம் பக்குவப்படுத்தி அம்மேனிலைக் கேற்றி வாழ்வித்துக் கொண்டும் இருக் கின்ற பேறே பெரும் பேருகும். இதுவன்றி முன்னைறி ஞரால் கண்டும், அடைந்தும் குறிப்பிட்ட காலம் இருந்தும் மறைவுற்றுப் போனதும் ஒரு பெறலரும் பேருகவே கொள்ள முடியாது.

இவர் பெற்ற பேறு சாமி அறிவாரடி என்று குறிக்கப் பட்டுள்ளது இறுதியாக. இத் திரிதேக சித்தி நித்தியானந்த வாழ்வு குறித்து இதற்கு முன் உலகம் அறியாது: கனவிலும் நனவிலும் கண்டதும் கொண்டதும் கூட இல்லையாம். ஆகை

Koviloor Digital Library

யால் தான் அப்படி. 'சாமி அறிவாராடி.' என்றும் சொல்லி விட்டார். ஏன் என்ருல், ஆண்டவர்க்கே அந்தச், சுத்த, பிரணவ, ஞான தேகநிலே, (பொன்-அம்-பலம் ஆக) பொன்னம் பலமாக இயல்பாய்ப்பொருந்தி இருந்ததே அல்லாமல், பிறிது எவர்க்கும் கிடைக்கப் பெற்று வாழ்ந்தார்கள் இல்லே, என்பது சத்தியம். இதனல், இவர் பெற்ற பேறு, உலகறியாத ஒன்று, சாமியே அறிந்திருந்த ஒன்று ஆகும்.



Koviloor Digital Library

முடிவுரை

திருஅருட்பிரகாசரின் இவ் ஆணிப் பொன்னம்பலக் காட்சி, சுத்த சன்மார்க்க உயர் பயனை உலகுக்கு வழங்க வந்த ஒன்ருய் அறியலாகும் ஆதலின் நிறை அருள் நிலை நின்றே இவ்வற்புதக் காட்சியின் பொற்புறு பொருளை, எவரும் ஏற்றுப் பயன் பெறும் வகையில் தருதல் நம் கடமையாகும். இந்தக் காட்சியை எல்லாம் எங்கிருந்து கண்டார் வள்ளற்பெருந்தகை? சிறப்பான சிரப்பீடத்தினின்றே, சுத்த நெறிமுறையில் கண்டு வெளியிட்டுள்ளார். சத்திய ஞான சபையிலே எழுவார் மேடை என ஒன்று தென்கிழக்கிலே இருக்கிறது. அது அகப்பொருளைப் புறங்கவியக் காட்டும் கொடிக்கம்பத்தடுத்து விளங்குவது. அக்கொடி மரத்து உச்சியில் பட்டொளி வீசிப்பறக்கும், பொன்மையும், வெண்மையும் கொண்ட கொடி உள்விளங்கும் அருட்பெருஞ் ஜோதிபதி உண்மையையே சுட்டுவதாம். இந்த எழுவார் மேடை மீது இருந்து கொண்டுதான் ஆணிப் பொன்னம்பலக் காட்சியை அகத்தும். புறத்தும் கண்டு, அதி அற்புதக் கண்ணிகளாய்த் தொடுத்து ஈண்டு வழங்கியுள்ளதைக் கண்டோம். இதனை உலகம் எல்லாம் கண்டு உய்யவேண்டும். எனவே ஈண்டு விளக்க நேர்ந்தது.

இக்காட்சி உண்மையை சமயமரபோடு வழங்கிஞல் மக்கள் சமுதாயம் முழுமையும் ஏற்காது. அருள் ஒளியிற்கண்டு உண்மையை உளம் கொண்டு, உளநெகிழ் அன்பொடு எவரும் ஒத்துவாழ வழிசெய்தல் வேண்டும் என்ற நோக்கோடுதான் இங்கு பொருள் விளக்கம் தரப்பெற்றுள்ளது.

அருட்பெருஞ் ஜோதிதான், உள் விளங்கும், சமயமதச் சார்பற்ற உண்மைப் பரம்பொருளாகும். இது எங்கும் நிறைந்திருப்பினும். தனிப்பெருங்கருணையோடு, ஒவ்வொருவரின் சிரநடு சிற்ஜோதியாய் அமைந்து விரிந்து விளங்குகின்றது.

Koviloor Digital Library

ஆகையால், அந்த அருட்ஜோதியே கடவுளாய் உள்ளிருந்து உணர்த்துவதும், நாமேயாய் அருள் அறிவால் அறிந்து சார்ந்து அகமிருந்து அனகமாக வாழ்வதால், அவ்இறை அனுபவம் கெடாது இன்பமயமாய் வாழலாம் என்ற வள்ளல் அனுபவ முறையை இக்காட்சி மூலம் தெளிவாக்கப் பெற்றுள்ளது.

இக்காட்சி எல்லாம் சத்விசார தயாவொழுக்க வாழ்வு நிலையில்தான் அறிந்தும், யூகித்து உணர்ந்தும், தெளிந்தும் கொள்ளப்படுவனவாம் இறை பெருஞ்செயலின் இயல் புணர்ந்து அக்காட்சியின் பெருமையில் அதிகம் வியந்து நிற்காது. வெற்றுக் கற்பனையோ, மனவெளித் தோற்றமோ என எண்ணி அலட்சியப்படுத்தி விட்டிடாது, எல்லாம் அருள் அனுபவத்தின் பொருட்டே வெளியாக்கப்பட்டனவாக அறிந்து குறிக்கோளை அடைய வேண்டுவது நம் கடமையாம். இக்காட்சி முடிவில் அகப்பதியோடு, நாம் கலவாமற் கலந்து, அத்துவிதமாய் உள்ள நிலையையுணர்ந்து நின்று மேற் கொண்டு அன்பும் அறிவும் இன்பமும் அனகமாக வெளிப் படுத்திக் கொண்டு வாழவேண்டுவதே கடவுள் ஆணையும், நம் கடமையும் ஆம்.

நாம் அருட்பெருஞ்ஜோதிமயமாய் சிரநடு இருப்பது கடவுளான்ம ஒன்றிய நிலையே. அப்படி இருந்து, சிந்தனையும், சொல்லும், செயலும் தயவேயாக வெளிப்படுத்திக்கொண்டு நித்தமும் வாழும் பழக்கம் ஏற்படுத்திக்கொண்டால்தான் இறை இன்ப வாழ்வு நிறைவுறும்,

இறை உண்மையை உலகுக்கு வழங்கவே பலரும் முயன்றிருக்கிறார்கள். ஆனால், புறத்திருந்து அடைய முயன்ற நெறிகளால் அவ் இறை இன்ப வாழ்வு கைவரப் பெற்றோர்கள் உலகில் நிலைத்து விளங்கக்காணோம். அவர்களின் தெய்விகக் காட்சிகளும், அனுபவங்களும் உபாயப் பொருளையே உணர்த்தின, ஒரு சிலவே, அகத் திலங்கும் உண்மைப் பொருளைக் காண, கண்டு கொள்ள உதவினவாம். அப்படியான உண்மை ஞானப் பொருளை

Koviloor Digital Library

வழங்குவதில் முதலிடம் பெறுவதும், முடிந்த நிலை பெறுவிப்பதும் நம் வள்ளல் அடிகளின் திரு அருட்பாப் பகுதிகளாகும். அதிலே இந்தக் காட்சிக் கண்ணியும் ஒன்று என்றால் அது உண்மையே.

ஆகவே, இந்தக் கண்ணிகள் அகத்திலங்கும் அருள் ஒளியோடு அத்துவிதமாய் நம்மைக் கண்டு கொள்ளச் செய்வது சாத்தியமே. அவனின்றி கடவுள் தயவுதான் யாவையும் விளங்கச் செய்து கொண்டேயுள்ளது அத்தயவு, அருட்ஜோதியாய், அறிவிலும், உயிர்ப்பிலும், உடலிலும் நிரம்பி தெய்வீக வாழ்வை வழங்குவிக்கிறதாம். இதுவே ஒருவனுக்கு அனுபவஞான மெய்ப்பொருளை அடையச் செய்வதாம்.

வாழ்வு முறையைத்தான் அனுபவ ஞானப் பொருள் என்று கூறவேண்டும். திருவருட்பாவும் அதில் வருஇக் காட்சிக் கண்ணியும், நமக்கு சத்விசார பரோபகார வாழ்வு தரவந்தனவேயாம். உபாயப் பொருளும், உண்மைப்பொருள், கல்வி அறிவாலும், ஒருமைத் தியான சாதன முறையாலும் அறிந்து கொள்ளலாம். அது கூட தெரியாமல் நம்பிக்கையோடும், பக்தியோடு பயின்று வந்தால் கூட சில நன்மை பெறுதல் சாத்தியமே.

வள்ளற் பெருமானின் திருவுள்ளமும், அருள் ஆண்டவரின் திரு ஆணையும், நாம் ஜீவதயா ஒழுக்கமும் ஒருமை சத்விசாரமும் செய்து வாழ்வில் தயவு அனுபவம் விளைவு கொள்ள வேண்டும் என்பதே திருவருட் சம்மதமாம். அப்படி முயன்று மேற்கொண்டால் எங்கும் நிறை பதியும் அகமும் புறமும் அப்போதப்போது தேவையான யாவும் தந்து உதவி வந்து முடிவில் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறை இன்ப வாழ்வையே வழங்கிவிடுவது சத்தியம். அக ஒளி அறியப் படாதவரை புறத்தில் உண்மையும் விளங்காது, துன்பமும் நீங்காது. அவ்வொளிபெற்று விட்டால் உளமகிழ்வு நிலைக்கும், புறச்சூழலும் பாதிக்காது நிரதிசயானந்த வாழ்வே சூழும். சூழ்க தயவு.

✽

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
2242
R65 (வசி)
கோவிலூர்-630 307

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம் கோவிலூர்-630 307

ஆசிரியரால் வெளியிடப்பட்ட
சில நூல்கள்

1.	தயவுப் பாக்கள்	25–00
2.	இங்கிதமாலை உரை	15—00
3.	சத்திய ஞான சபை	6—00
4.	அட்டகம் உரை	3—00
5.	மாயை	4-00
6.	தயா விளக்க மாலை உரை	2—00
7.	அருளே சிலுவை	1—00
8.	தயா பெரும் பழம்	7–00
9.	திருக்கதவம் திறத்தல்	3—00

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1.